# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி - சென்னை, ஜோஸ்பிட்டா மேரி, எதெல்பெர்கா, ஜெசிந்தா ஆரோக்கிய மேரி - திருச்சி, அமிர்த ராணி, கலிஸ்டா மேரி -திண்டுக்கல், ரெஜினா மேரி - தஞ்சாவூர், மார்சலோசா மேரி, லோரா மேரி, ஆக்னஸ் ரோசாள் - தூத்துக்குடி, சிரில் - கடலூர், அருள் மேரி, லூக்காஸ் மேரி, அனன்சியா மேரி, பிலோமினாள், டோம்னா மேரி, ஜார்லத் புஷ்பா, டோன்போஸ்கோ மேரி - கும்பகோணம், சலேத் மேரி - திருப்பூர், புஷ்பா மேரி - காரைக்குடி, வித்யா மேரி, பிரேமா - திருநெல்வேலி, குழந்தைதெரஸ்- சேலம், லில்லி இஸபெல்லா மேரி- மதுரை, ரூபி மேரி - கரூர், புஷ்பம் - சிந்தாமணி, அருன் சீலி - முட்டம்

**பொதுநிலையினர்**

ரூபியா - மங்கலக்குன்று, பிரான்சிஸ் பேசில், G.S.பாத்திமா, சந்தனம், கிளாரா லூர்து மேரி, இமாக்குலேட் சோபியா, லூதியா மேரி, ஞான சேகரன் - திருச்சி; லீலாவதி, அமல செல்வி, இருதய விஜிலா — திண்டுக்கல்; மைக்கேல்சாமி, புஷ்பக்கண்ணு - கோயம்பத்தூர். இமாக்குலேட் மேரி-, மதலைமுத்து- தர்மபுரி, ராணி - சென்னை

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

அருட்சகோதரி. லில்லி இஸபெல்லாமேரி OSM- மதுரை

திருமதி. லீலாவதி திண்டுக்கல்

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.







# பெருமை

## பதிப்பாசிரியர் பக்கம்

**அ.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச**


ஒரு மனிதன் தனக்காகக் கொடுக்கும் அங்கீகாரம் பெருமை கிடையாது. மற்றவர்களால் கொடுக்கப்படும் அங்கீகாரம்தான் இந்த பெருமை. அன்னை மரியாளின் வாழ்க்கையில் இது கடவுளால் கொடுக்கப்படுகின்றது. இது எப்படிப்பட்ட பெருமை தெரியுமா? எந்த மனிதப் பெண்மணிக்கும் கிடைக்கப்பெறாத பெருமை. உலகைப் படைத்த கடவுளின் மகனுக்கு தாயாகக் கூடிய பெருமை. இறைவனின் தாயாகக் கூடிய பெருமை.

கடவுள் இந்தப் பேற்றினை அன்னை மரியாளுக்குக் கொடுக்கக் காரணம். அவர் வாழ்ந்த வாழ்க்கை. தன்னுடைய பிறப்பு முதல் அன்னை மரியாள் கடவுளுக்கு ஏற்ற வாழ்க்கைதான் வாழ்ந்து வந்தார். கடவுள் என்னதான் தன் மகனுக்கான தாயைத் தேர்ந்தெடுத்தாலும் அவரின் விருப்பத்தை அறிய விரும்புகின்றார். அன்னை மரியாளுக்கு கடவுள் முழுச்சுதந்திரம் கொடுத்தார். இயேசுவின் தாயாக விருப்பமா? என்ற கேள்விக்கு ‘ஆம்’ என்றும் சொல்லலாம். ‘இல்லை’ என்றும் சொல்லலாம். ஆனால் அன்னை மரியாள் ‘ஆம்’ என்று சொல்லுகின்றார்.

கடவுள் தன்னுடைய மகனை உலகுக்கு அனுப்புவதற்கு முன்னால் செய்த முன்னேற்பாடுகள் ஏராளம். பாவக் கறை படிந்திருக்கும் மனிதக் குலத்தில் ஒருவனாக தன் மகன் வாழ வேண்டுமென்றால் அவன் பாவத்தால் பாதிக்கப்படக்கூடாது. இந்த ஜென்மப் பாவம் தன்



## உள்ளே




| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | - 05 |
| விடுதலை தேடும் பெண்களின் வாழ்வில் மரியா | -06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| பார்புகழ் பாத்திமா அன்னை வரலாறு | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மரியா - கடவுளின் கடிதம் | - 25 |
| பொதுநிலையினரின் பார்வையில் மரியா | - 28 |
| வாழ்வே தவமாக | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

மகனுக்கு வரக்கூடாதென்றால் அவன் தாயிடம் அப்பாவம் இருக்கக்கூடாது. இதற்காகவே கடவுள் அன்னை மரியாளுக்கு ஜென்மப் பாவத்திலிருந்து விலக்கு அளிக்கின்றார். இதனை அன்னை மரியாளே 1858 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் லூர்து நகரில் பெர்னதெத் என்ற சிறுமிக்கு காட்சி கொடுக்கும்போது, உங்கள் பெயர் என்ன என்ற கேள்விக்கு 'நானே அமல உற்பவம்' என்று பதில் கூறியிருப்பார். திருத்தந்தையும் 1854 ஆம் ஆண்டே அன்னை மரியாள் அமல உற்பவி என்ற மரியியல் கோட்பாட்டை பிரகடனம் செய்திருப்பார்.

இறைமகன் இயேசு இந்த உலகிற்கு வந்தது மக்கள் அனைவருக்கும் மீட்பைக் கொடுப்பதற்காக. அதுவும் பாவம் என்னும் குழியில் விழுந்து கிடப்பவர்களை தூக்கி விடுவதற்காக. அன்னை மரியாளின் வாழ்க்கையில் பாவம் என்பதே கிடையாது. அப்படி என்றால் அன்னை மரியாளுக்கு இயேசு மீட்பர் கிடையாதா? அன்னை மரியாளுக்கும் இயேசு மீட்பர்தான். உலக மக்கள் அனைவரையும் பாவத்திலிருந்து மீட்டவர், அன்னை மரியாளை மிகச்சிறப்பான விதத்திலே மீட்டிருக்கின்றார்.

இவ்வளவு சிறப்புகளை அன்னை மரியாளுக்கு கொடுத்த கடவுள் பல பெருமைகளையும் அன்னைக்கு கொடுத்திருக்கின்றார்கள். லூக்கா நற்செய்தி அதிகாரம் 1 இறைவார்த்தை 8-ல் இருந்து பார்த்தோம் என்றால் புரியும், கடவுள் அன்னை மரியாளுக்கு எவ்வளவு பெருமைகளைக் கொடுத்திருக்கின்றார் என்று. அருள் மிகுதியாக பெற்றவர் என்ற பெருமை, ஆண்டவரைத் தன்னோடு வைத்திருக்கின்றவர் என்ற பெருமை மற்றும் தூய ஆவியைப் பெற்றுக் கொண்டவர் என்ற பெருமை.

இத்தனைப் பெருமைகளைப் பெற்ற அன்னை மரியாள் எந்தவொரு தலைக்கனமும் இல்லாமல் தாழ்ச்சியுடன் சொல்கின்றார். "நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்." ஆண்டவர் கொடுத்த பெருமைகளையும் தன்னில் இருக்கும் தாழ்ச்சியையும் கொண்டிருக்கும் அன்னை மரியாள் நமக்கு சொல்லித்தருகின்ற பாடம் என்னவென்றால் நாம் நம்முடைய வாழ்க்கை முழுவதும் தாழ்ச்சி என்ற குணத்தோடு இருந்தால் நிச்சயம் கடவுள் நம்மைப் பெருமைப்படுத்துவார்.

இறையேசுவில் பிரியமான வாசகர்களே, ஒருவருக்கு நன்றியும் இன்னொருவருக்கு நல்வரவும் சொல்ல நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். குடும்ப வாழ்வில் மரியா என்ற தலைப்பில் கடந்த ஒரு வருடமாக அன்னை மரியாளின் குடும்பம் நம் குடும்பங்களுக்கு எந்த அளவுக்கு முன்மாதிரிக் குடும்பமாக இருந்தது என்று தன்னுடைய அறிவுச் செறிவுமிக்க கட்டுரையின் மூலம் எடுத்துக்கூறிய **அருட்தந்தை கில்பர்ட்ராஜ் ம.ஊ.ச** தன்னுடைய கட்டுரையை முடித்துக் கொள்கின்றார்கள். அவர்களுக்கு ஐக்கிய அன்னை மறைமாநிலத்தின் சார்பாகவும், ஆகட்டும் பதிப்பாசிரியர் மற்றும் வாசகர்கள் அனைவர் சார்பாகவும் இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவருடைய ஆன்மீகப்பணி சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றோம். அதே நேரம் புதிதாக ஆசிரியர் குழுவில் இணைய இருக்கும் **திரு. பரிசுத்தமணி** அவர்களை ஐக்கிய அன்னை மறைமாநிலத்தின் சார்பாகவும், ஆகட்டும் பதிப்பாசிரியர் மற்றும் வாசகர்கள் அனைவர் சார்பாகவும் வருக வருக என்று வரவேற்கின்றோம்.





**பெரியநாயகி**

எனக்கு திருமணமாகி இரண்டு வருடங்களாகியும் குழந்தையில்லை. என்னுடைய வீட்டின் அருகில் இருந்த சகோதரி ஜீவ மாதாவின் ஆலயத்தைக் குறித்து என்னிடம் சொன்னார்கள். நானும் என் கணவரும் ஒன்பது மாதங்கள் ஆலயத்திற்கு வந்து ஜெபித்தோம். நான் கருவுற்றேன். எனக்கு அழகிய குழந்தை தந்த கடவுளுக்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

## மரியின் ஊழியர்கள் இந்திய மண்ணில்(1974-2024) பொன்விழா - செபம்

அன்புத் தந்தையே இறைவா, நற்செய்தி மதிப்பீடுகளை வாழ்வாக்கி உலகிற்கு ஒளியாக, ஐம்பது ஆண்டுகள் மரியின் வழியில் பாரம்பரியம் மிகுந்த இந்திய மண்ணில் நம்பிக்கையை விதைக்கும் ஊழியர்களாக வாழ அழைத்தமைக்கு உமக்கும், எம் வியாகுல அன்னைக்கும் எங்கள் நன்றியை காணிக்கையாக்குகின்றோம். எங்கள் முயற்சிகளிலும், பணிவாழ்வின் கடினமான சூழல்களிலும் எமக்கு உற்சாகமும், ஆதரவும் தந்து எம்முடன் பயணித்த, இன்றும் பயணிக்கின்ற அனைவருக்கும் நிறையாசீர் அளித்தருளும். எம் அர்ப்பண வாழ்வில், நாங்கள் அனைவரும் அன்பு, அமைதி, நீதி, பகிர்வு, மன்னிப்பு ஆகியவற்றிற்கு முன்மாதிரிகளாகத் திகழ்ந்து துன்புறுவோர் அனைவரும் ஆறுதலும் நற்சுகமும் பெற்றிட நம்பிக்கையை ஏற்படுத்தும் ஊழியர்களாக வாழ்ந்து பணிசெய்து மகிழ்ந்திட உம் ஆவியால் வழிநடத்துவீராக. இளைஞர்கள், படைப்பின் மேன்மையை உணர்ந்து, தங்கள் வாழ்வை உமக்கு அர்ப்பணித்து, மரியின் ஊழியர் சபையில் பணிபுரிந்திட ஊக்கமளித்தருளும். எமது வாழ்வும் பணியும் நீர் தரும் முடிவில்லா அமைதியை எதிர்நோக்கி இருக்கச்செய்தருளும். எமக்கு முன்னும், எம்மோடும், ஊழியர் சபையில் பயணித்து, பணிபுரிந்து இறந்த உம் அடியார்கள் விண்ணக உறைவிடத்தில் நிலையான இளைப்பாறுதல் அடைவார்களாக. வியாகுல அன்னை, தம் திருமகன் கிறிஸ்துவோடு, எமது ஐக்கிய அன்னை இந்திய மாநில குழுமங்களையும், உலகளாவிய மரியின் ஊழியர் சபையையும் எப்போதும் புதிய நம்பிக்கையை விதைத்திடும் பயணத்தில் வழிநடத்த திருவுளம் கொள்வீராக. எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். - ஆமென்.



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

செல்வி. யாழினி ஜோஸி விக்டர்
சோழிங்கநல்லூர், சென்னை

பிப்ரவரி மாதம் 4 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவ மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பங்கு திருநாளாகவும் இருந்த காரணத்தால் பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**மேரி கிளாரா - மேடவாக்கம்**

எனக்கு இரண்டு மகன்கள். மூத்த மகனுக்கு திருமணமாகி இரண்டு வருடங்களாக குழந்தை இல்லை. ஜீவ மாதாவின் பரிந்துரையால் கருவுற்று ஒரு ஆண் மகனைப் பெற்றெடுத்தார். இப்போது இரண்டாம் முறையாக கருவுற்றிருக்கின்றார். என்னுடைய இரண்டாம் மகனுக்கு திருமணாகி ஒரு ஆண்டு வரை கரு உண்டாகவில்லை. என் மகனும் மருமகளும் ஆலயத்திற்கு வந்து ஜெபித்தனர். இங்கு வந்து சென்ற ஐந்தாவது மாதத்தில் கருவுற்றிருக்கின்றார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

எனக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். என்னுடைய மூத்த மகளுக்கு 2021 ஆம் ஆண்டு மாப்பிள்ளை பார்த்தோம் ஆனால் எந்த வரனும் அமையவில்லை. 2023 ஆம் ஆண்டு மரியாயின் சேனையிலிருந்து வந்து ஜெபித்தார்கள். நாங்களும் ஜீவ மாதாவின் ஆலயத்திற்கு வந்து ஜெபித்தோம். அடுத்தநாள் மாப்பிள்ளை வீட்டார் எங்கள் வீட்டிற்கு வந்து திருமண ஒப்பந்தம் செய்தார்கள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



**“நான் ஆண்டவரின் அடிமை; உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்”**

அரசன் ஒருவன் மாறுவேடத்தில் நகர்வலம் சென்றார். அப்போது இரண்டு பிச்சைக்காரர்கள் பிச்சை எடுப்பதைக் கண்டார். அதில் ஒருவர் கடவுள் பெயரைச் சொல்லி பிச்சை கேட்டார். மற்றொருவர் அரசன் பெயரைச் சொல்லி பிச்சை கேட்டார். அரசன் அவர்களிடம் அதற்கான காரணத்தைக் கேட்டார். அதற்கு கடவுள் நம்பிக்கை கொண்ட பிச்சைக்காரர், ‘ஐயா! இந்த உலகம் முழுவதையும் காப்பவன் இறைவன். அவரது அருளால் மட்டுமே ஒருவன் விடுதலை பெற்று மாற முடியும்’ என்று கூறினார். மற்றொரு பிச்சைக்காரர் , ‘ஐயா! கடவுள் கண்ணுக்குத் தெரியாதவர், கண்ணுக்குத் தெரிபவர் அரசர் மட்டுமே, அரசனால் மட்டுமே ஒருவர் விடுதலை பெற்று வாழ்வில் உயர முடியும்’, என்று கூறினார். அரசன் அரண்மனைக்குத் திரும்பியதும், “அரசன் பெயரில் பிச்சையெடுத்த நபரை அழைத்து பரங்கிக்காய்க்குள் தங்க வைர நகைகளை வைத்து பரிசளித்தான். சில நாட்கள் கழித்து, அரசன் நகர்வலம் சென்றபோது, அரசன் பெயரில் பிச்சை எடுத்த நபர் மீண்டும் சாலையோரம் அமர்ந்து பிச்சையெடுப்பதைக் கண்டு வியப்புற்றான். உடனே அரசன் அவனை அழைத்து, “நான் உனக்கு பரிசுகள் அளித்தும் நீ பிச்சை எடுக்க வேண்டிய அவசியம் என்ன? என்று கேட்டான். அதற்கு அவன், “அது வெறும் பரங்கிக்காய், அதை ஐம்பது ரூபாய்க்கு விற்றுவிட்டேன்” என்றான். அரசன் அந்த பிச்சைக்காரரை நன்றாக திட்டிவிட்டு நகர்ந்தார். சற்று நகர்ந்ததும் ஒரு செல்வந்தனைக் கண்டார். அது இறைவன் பெயரைச் சொல்லி பிச்சை எடுத்தவர் என்பதை அரசன் உணர்ந்தார், அவனிடம் சென்று, “ நீ மட்டும் எப்படி செல்வந்தனாக மாறினாய் என்று கேட்டார். அதற்கு அவன், ‘அரசே , நான் ஒவ்வொரு மாதமும் அன்னதானம் செய்வேன், அதற்காக ஐம்பது ரூபாய் கொடுத்து ஒரு பரங்கிக்காய் வாங்கினேன், அதை வெட்டியபோது, அதனுள் தங்க , வைர நகைகள் இருப்பதைக் கண்டேன். கடவுளின் “அருளால்” செல்வந்தனாக மாறிவிட்டேன் என்று கூறினார். மார்ச் மாதம் 25-ம் நாள் ஆண்டவரின் பிறப்பு அறிவிப்பு பெரு விழாவாகக் கொண்டாடுகின்றோம். இந்த பெருவிழா கி.பி. 430 –ம் ஆண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகின்றது. கபிரியேல் வானதூதர் கன்னிமரியாளுக்குத் தோன்றி , “ மரியா, அஞ்சவேண்டாம்: கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர், இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர், அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர் என்று வாழ்த்தினார். கடவுளால் முடியாதது ஒன்றுமில்லை. மரியாள் இறைவனின் அருளால் நிரப்பப்பட்டிருந்தார். “ஆகட்டும்” என்று இறைவனின் திட்டத்திற்கு இசைவு தந்ததால் மென்மேலும் உயர்த்தப்படுகின்றார். தன்னையே தாழ்த்தியதால் இயேசுவையே பெற்றெடுக்கும் அருளைப் பெற்றார். எனவே அருள் மிகப் பெற்ற நம் அன்னையைப் போல், ஆண்டவருக்கு நம் உள்ளத்தைத் திறந்து வைப்போம். “ இதோ, நான் ஆண்டவரின் அடிமை; உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்” என்று கூறி நம்மையே இறைவனுக்கு அர்ப்பணித்து, இறைதிட்டத்தில் பங்கெடுப்போம்.

# விடுதலை தேடும் பெண்களின் வாழ்வில் மரியா

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்கவுரை**

மார்ச் மாதம் என்றால் பலருக்கும் பல வகைகளில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. அகில உலக பெண்கள் தினம் இம்மாதம் 8 ஆம் நாள் கொண்டாடப்படுவதை அறிவோம். விடுதலைக்காக ஏங்கும் பெண்களின் வாழ்வில் இன்றைய நிகழ்வுகள் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. இம்மாதம் முழுவதும் தூய வளனாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதம். புனித யோசேப்பு தூய கன்னி மரியாவின் கணவர் என்னும் விழாவை 20 ஆம் நாள் திருஅவை கொண்டாடி திருமணமான ஆண்களும் பெண்களும் திருக்குடும்பம் போன்று ஒவ்வொரு குடும்பத்தையும் மாற்றலாம் என சிந்திக்க அழைக்கின்றது. இன்னும் சிறப்பாக மார்ச் 25 ஆம் நாள் கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இந்த மகிழ்வின் செய்தி மங்கள வார்த்தையாக மரியாவுக்கு வானதூதரால் அறிவிக்கப்படுகிறது. இம்மூன்று நிகழ்வுகளும் இன்றைய பெண்களோடும், மரியாவோடும் அதிக தொடர்புடையவை. மரியா விடுதலைப் பெண்ணாக காட்சி தருகின்றார். அவர், 'அடிமை' என்று இறைத்திட்டத்திற்குப் பணிந்தாலும், அவர் ஒரு வீரமங்கை. அவரது இதயம் வைரம் பாய்ந்த ஒன்று. இந்த வீரப்பெண் இந்த மாதத்தில் நமக்குக் கூறும் செய்தியைக் கேட்போம். சிந்தனை செய்வோம் செயல்படுத்துவோம்.

**விடுதலைக்கு வித்திட்ட மரியா**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மரியா வாழ்ந்த சூழலுக்கு நினைவில் செல்வோம். அன்று அரசியல், சமுதாயம், பொருளாதாரம், சமயம் அனைத்திலும் சமயத் தலைவர்களின் கை ஓங்கி இருந்தது. சாரம் நீக்கப்பட்ட சக்கையாக சமயம் இருந்த காலம் அது. அரசியல் தலைவர்களும் சமயத்தில் தலையிட்டதால் விடுதலைக் காற்றை சுவாசிக்க மக்கள் ஏங்கி நின்ற காலம். ஏழைகள், பாவிகள், நோயுற்றோர், புறவினத்தார் அனைவரும் சமுதாயத்தின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டனர். ஏழை மக்களின் சிறிய வருமானமும் உரோமை ஆட்சியாளர்களால் உறிஞ்சப்பட்டது. பெண்கள் சமுதாயத்தில் இரண்டாம் தர குடிமக்களாகக் கருதப்பட்டனர். பெண்களாக பிறக்கவில்லை என்பதற்காக யூத ஆண்கள் இறைவனுக்கு நன்றி செலுத்தினர். ஆயினும் இந்த அடிமைத்தனத்திலிருந்து தம்மை மீட்க மெசியா விரைவில் பிறப்பார் தம்மை மீட்பார் விடுதலை அளிப்பார் என மரியா நம்பினார்.

விண்ணகத் தந்தையும் தம் ஒரே மகன் வழியாக இவ்வுலகை மீட்க விருப்பம் கொண்டு, அவர் ஒரு குழந்தையாக அன்னை மரியாவின் திருஉதரத்தில் உருவாக காலத்தையும் இடத்தையும் குறித்தார். வானதூதர் வழியாக இம்மாபெரும் மங்கள செய்தி, அருளால் நிறைந்த மரியாவுக்கு வழங்கப்பட்டது. "என்ன தவம் செய்தாயோ மரியே என்ன தவம் செய்தாயோ, எம்மான் இயேசு உன்னை அம்மா என்றழைக்க" என்ற பாடல் வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன. இயற்கைக்கும் எதார்த்தத்திற்கும் அப்பாற்பட்ட ஒன்றை இறைவனே தன்னிடம் கேட்ட போதிலும் மரியா துணிவுடன் பணிவுடன் தனது கலக்கம், அச்சம், விளக்கம் அனைத்தையும் 'இது எங்ஙனம் ஆகும்?' என்ற கேள்வியில் உள்ளடக்குகிறார். ஒரு பெண் இறைவனிடம் கேட்ட முதல் கேள்வியே இதுவாகத்தான் இருக்குமோ?

மரியாவின் அகச்சுதந்திரம் இன்றைய பெண்களுக்கு சிறந்த மாதிரியாக இருக்கின்றது. 'ஏன்' என்ற கேள்வியைக் கேட்பவருக்கு, 'எப்படி வாழ வேண்டும்' என்பது தெரியும். வீட்டிலும், வேலை செய்யும் இடங்களிலும் பெண்கள் பல நேரங்களில் மௌனிகளாக இருக்கிறார்கள். வலக் கன்னத்தில் அறைபவருக்கு மறு கன்னத்தையும்





முன்னோர் பாதையில் முறையுடன் செல்லல்
பெற்றோர் பெரியோர் சொல்லினை ஏற்றல்
மனம் செல்லும் வழியில் செல்லா திருத்தல்
இவையே சிறுவர் செய் உயர்தவ நெறியே!
'ஆசையை ஒழித்தால் துன்பம் நீங்கும்'
'அளவான ஆசை ஆக்கத்தை அளிக்கும்'
பெரும் பெரும் ஆசை பெருநஷ்டம் சேர்க்கும்'
எப்படியும் வாழலாம் என்பதை விடுத்து
இப்படித்தான் வாழ்வேனென இறைவழி வாழ்தல்
இம்மை மறுமையின் இன்பங்கள் ஈட்டும்
என்பன எல்லாம் இதயத்தில் இருத்தி
அனைவரும் வாழ்தல் அருந்தவம் அன்றோ?

### குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.

1 விண்ணுலகில் இருக்கிற 3 அருள் நிறை மரியே தந்தைக்கும் மகனுக்கும்

**சந்தா செலுத்துபவர்கள், மணியார்டர் மூலமாகவோ, வங்கி கணக்கு மூலமாகவோ, Google Pay மூலமகாவோ செலுத்தலாம். தகவல்கள் இரண்டாம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. Google Pay மூலம் பணம் செலுத்துபவர்கள் உங்கள் முகவரியை 8122795035 என்ற எண்ணுக்கு வாட்ஸ் அப் குறுஞ்செய்தியாக அல்லது சாதாரண குறுஞ்செய்தியாக அனுப்ப கேட்டுக் கொள்கின்றோம்**

# வாழ்வே தவமாக

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

தவத்தின் பயனை உலகினுக் குணர்த்த
நினிவே நோன்பை விவிலியம் கூற
செபமும் தவமும் வாழ்வினுக்குறுதி
என்றே மொழிந்தாள் பாத்திமா அன்னை
சாம்பலில் அமர்ந்து சாக்குடை தரித்து
உண்ணா நோன்பும் உடலினில் சோர்வும்
நல்தவம் என்றே நவின்றனர் முன்னோர்
இத்தவம் இயற்ற இயலுமோ இன்று
வாழ்வே தவம் என வாழ்வது நலமே!
தானூறும் துன்பம் தாங்குதலோடு
எவ்வுயிர் தமக்கும் ஏதும் செய்யாமை
தவம் என மொழியும் தமிழ்மறைச் சாரம்
நம் இருள் வாழ்வில் ஒளிதரும் அன்றோ?
“ஒரு கன்னம் அறைந்தால் மறுகன்னம் காட்டு”
“எழுபதேழு முறை உன்சகோதரரை மன்னி”
என்றே பகர்ந்தார் இயேசு
“பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே”
“பகை நடுவினில் அன்புருவான
நம்பரமன் வாழ்கின்றான்”.
“தின்ன வரும்புலி தன்னையும் அன்பொடு
சிந்தையிற் போற்றிடுவாய் நன்னெஞ்சே”
என்றே பாடினான் பாட்டுக் கொருபுலவன் பாரதி
மறுகன்னம் காட்டுவதும்
மாண்போடு மன்னிப்பதும்
பகைவரை அன்புசெய்வதும்- நம்
உள்ளுணர்வை வருத்துகின்ற
இறைவிரும்பும் செயலன்றோ?
அதுவேதான் நமது வாழ்வின்
தலைசிறந்த தவமன்றோ?
கணவன் மனைவி இருவரின் இடையே
கருத்துகள் மாறி மோதிடும்போது
உள்ளெழும் உணர்வின் ஓங்காரம் ஒழித்து
ஒருவருக் கொருவர் கட்டுப் படுதல்
விட்டுக் கொடுத்தல் ஒத்துப் போதல்
தம் நிலை உணர்தல் என்பவை யாவும்
செய்வதற் கரிய நல்தவம் அன்றோ?
“வைகறையில் துயில் எழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து
தந்தையையும் தாயையும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை”
எனவே-





திருப்பிக் காட்டுங்கள் (மத் 5:39) என்று மலைப்பொழிவில் இறைமகன் இயேசு மொழிந்தார். அதே இயேசு தன்னை அறைந்தவரைப் பார்த்து “... சரியாகப் பேசியிருந்தால் ஏன் என்னை அடிக்கிறீர்?” (யோ 18:23) என்று கேட்டார். பெண்களுக்கெதிராக கொடுமைகள் தாயின் கருவறையிலிருந்து கல்லறை வரை ஒவ்வொரு நிமிடமும் அரங்கேறுகிறது. ஆனால் ஆண்களும் பெண்களும் சுயநலத்தோடு எனது குடும்பம் மட்டும் வாழ்ந்தால் போதும் என நினைத்தால் இச்சமுதாயம் அடிமைத்தனம் என்கிற இருளில் மூழ்கித்தான் இருக்கும். கேள்விகள் கேட்பது மனிதனுக்கு அழகு. இறையரசு விழுமியங்கள் மறைக்கப்படும்போது, மழுங்கடிக்கப்படும் போது கேள்விகள் எழுப்பப்படுவது கிறிஸ்தவத்திற்கு சாட்சி. பெண்களை சகோதர மனப்பான்மையுடன் நடத்தத் தவறும் போதெல்லாம் இறையாட்சிக் கனவுகள் மலர்வதற்கு நாம் தடையாக இருக்கின்றோம். சிந்திப்போம். அன்னை மரியா காட்டும் வழியில் நடக்க உறுதி எடுப்போம்.

**மரியாவின் புரட்சிப் பாடல்**

இறைவார்த்தையை தன் இதயத்திலும், கருவிலும் தாங்கியவராய் மீட்பரின் இறையாட்சி மலரும் என்ற மகிழ்வின் சிந்தனைகளைச் சுமந்தவராய் மரியா, யூதேயா மலைநாட்டிற்கு விரைகின்றார். இறைவனின் செம்மறியை உலகுக்கு அறிவிக்க விரும்பும் முன்னோடியின் தாய் எலிசபெத், மரியாவை ஆண்டவரின் தாயாக தரிசனம் செய்ய இறை ஆவியானவரால் ஆட்கொள்ளப்படுகின்றார். குழந்தையும் அக்களிப்பால் துள்ளி மகிழ்கிறது. அப்போது மரியா குரலெழுப்பி பாடிய விடுதலைக்கீதம் ஒவ்வொரு பெண்ணின் அகக்கனவாக கருகொள்ளப்பட வேண்டும். புதிய மோயீசனாம் இயேசு அமைக்க விரும்பும் இறையாட்சி எக்காலத்திலும் நீடித்து நிலைக்க வேண்டும் என்று பாடுகின்றார். “உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரை சிதறடித்து வருகிறார்” என்பது அன்னையின் ஆன்மீகப் புரட்சி. குழந்தை உள்ளம், தாழ்ச்சி நிறை இதயங்களுமே இறைவன் உறையும் ஆலயங்கள் என்று நமக்கு உண்மையான ஆன்மீகத்தைப் புரிய வைக்கின்றார். “வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார்”. நீதியும் அமைதியும் இல்லாத எந்த அரசும் வீழ்த்தப்படும். இது ஒரு அரசியல் புரட்சி. “தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்”. இது ஒரு சமுதாயப் புரட்சி. மெசியாவின் வருகையில் தாழ்த்தப்பட்டோர் அனைவரும் உயர்ந்தோராய்ப் போற்றப்படுவர். “பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார் செல்வரை வெறுங்கையராய் அனுப்பி விடுகிறார்”. இது ஒரு பொருளாதாரப் புரட்சி. ஏழைகள், வறுமையுற்றோர் அனைவரும் பசியார உண்பர். செல்வங்கள் அனைத்தும் இவர்களோடு பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் எனும் நற்செய்தி அறிவிக்கப்படும். பகிராத செல்வந்தர்கள் இறையாட்சிக்குப் புறம்பே தள்ளப்படுவார்கள்.

**மரியா - யோசேப்பு - பெண்கள்**

இம்மாதம் 20 ஆம் நாள் மரியாவின் கணவர் யோசேப்பின் திருவிழாவை நாம் சிறப்பிக்கும்போது இவ்விருவரும் இன்றைய பெண்களுக்கும் ஆண்களுக்கும் நிறைய செய்திகளைத் தருவதைக் காண்கிறோம். பெண் விடுதலை பேசுபவர்கள் மற்றவரின் சுதந்திரத்தைப் போற்ற வேண்டும். பேசுபவர்கள் அகத்திலும் பூரண சுதந்திர மனநிலை கொண்டிருக்க வேண்டும். சுதந்திரம் என்பது மனம் சொல்வதையெல்லாம் செய்வது அல்ல என்பதை அறிவோம். எதைச் சொன்னால், செய்தால் எனக்கு உள்ளத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் உருவாகிறதோ அதுதான் எனது சுதந்திரம். இதை மற்றவரும் அனுபவிக்க, அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட நான் அனுமதிப்பதும் அகச்சுதந்திரத்தின் மற்றொரு பாகம். கிறிஸ்தவர்கள் இன்னும் அதிகமாகவே இயேசுவின் புதிய கட்டளைகளைக் கடைப்பிடிக்க அழைக்கப்படுகின்றோம். இது முழுமையாக வாழப்படாமல் இருப்பதால்தான் இல்லங்கள், பங்குகள், துறவற குழுமங்கள் ஏன் திருஅவையிலும் நிம்மதியற்ற சூழலை மனிதர்களாகிய நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். இவைகளை சிலுவைகளாகவும் பார்த்து பொறுமையுடன் சுமந்து செல்கிறோம்.

மரியாவுக்கும் யோசேப்புக்கும் திருமண ஒப்பந்தம் நடைபெற்றிருந்தது. திருமண நிகழ்வு இன்னும் நடக்கவில்லை. மரியா கருவுற்றிருக்கின்றார். வளனார் குழப்பம் அடைகின்றார். மரியாவை சந்தேகிப்பதா? அவரின் அழகிய உள்ளம் வளனாருக்குத் தெரியும். அருமையான பெற்றோர் நேர்மறையான எண்ணங்கள் ஒரு புறம். மறுபுறம்

பிறர் அறிய வந்தால் மரியாவின் நிலை என்ன? மோயீசனின் சட்டத்தை பரிசேயர், சதுசேயர் கூட்டம் தூக்கிப்பிடித்தால் மரியா இகழ்ச்சிக்கும் கொடுமைக்கும் உள்ளாவார். நமது புனிதர் செபிக்கின்றார். முடிவை இறைவனின் கையில் விட்டுவிட்டு தியானத்தில் மூழ்கிவிடுகின்றார். இரவு பகல் என்று பாராது இறைவனின் திருவுளத்தை அறிய முற்படுகின்றார். இறைவன் நல்ல பதிலைத் தருகின்றார். இறைவனின் அன்னையை, புனித வளனாரை விட வேறு யாரும் அதிகமாக நேசித்து இருக்க முடியாது.

வளனார் யூத சமுதாயத்தின் சட்ட திட்டங்களை, மரபுகளை உள்வாங்கியிருந்தார். ஆயினும் அவரிடம் பெண்ணிய சிந்தனைகள் மேலோங்கி இருந்தன. இவர் இன்றைய ஆணாதிக்க சமுதாயத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கின்றார். இன்று சந்தேகத்தின் பேரில் எத்தனையோ குடும்பங்கள் பிரிந்து திருமணம் என்ற அருள் சாதனத்தை நிறைவேற்றாமல் அது தரும் அருள் கொடைகளைப் பெறாமல் இருக்கின்றனர். பெற்றோர்கள், குழந்தைகளுக்கு சிறந்த முன்மாதிரியாக இல்லை. மரியா, வளனார் மீது கிறிஸ்தவ குடும்பங்கள் அதிக பக்தியும், வணக்கமும் கொண்டுள்ளோம். அவைகள் வெறும் உணர்ச்சிகள் அடிப்படையிலேயே இருக்கின்றன. அவர்களின் மாதிரியான வாழ்வு கிறிஸ்தவ குடும்பங்களுக்கு விடுக்கும் சவால்களை உணர்ந்து கொள்வது நல்லது. திருக்குடும்பத்தில் நிலவிய உண்மையான அன்பு, பகிர்வு, தியாகம், விட்டுக்கொடுத்தல் அனைத்திற்கும் மேலாக இறை அருளில் நிலைத்தல் ஆகிய பண்புகள் நமது குடும்பங்களில் கடைபிடிக்கப்பட மரியாவும், வளனாரும் ஆசிக்கின்றனர். குறிப்பாக பெண்களை மதிக்கக் கற்றுத் தருகிறார் வளனார். மரியா தனக்கு மனைவியாக இருந்தாலும் ‘அவர் மீட்பரின் தாய்’ என பேரன்புடனும், அருளுடனும் நடத்தினார். எத்தனை பயணங்கள். அனைத்திலும் பாதுகாப்பு அரணாக இருந்தார் நம் புனிதர். பெண்கள் தினத்தில் வெறும் சொற்பொழிவுகள் முழங்கும் யுகத்தில் இருக்கிறோம். பெண்களே, பெண்களைப் போற்றுவோம், ஊனியல்பின் கண்களை விடுத்து இறைப்பார்வையோடு பெண்களையும், ஆண்களையும் இறைவனில் சாயலாக பார்ப்போம். இயேசுவின் தோழமை உணர்வில் சகோதர சகோதரிகளாக நேசிப்போம். பாலியல் வன்கொடுமைகளுக்கு பலியாகும் செய்திகளைக் கேட்டு அறச்சினம் கொள்வோம். நலமான திட்டங்களால் சிறுமியர் வாழ்வு வளம் பெறச் செய்வோம். இவ்வாறு பெண் சமுதாயத்தின் மீது அக்கறை உள்ளவர்களாக வாழும் போது தான் நாம் கொண்டாடும் விழாக்களும் அர்த்தம் பெறும்.

**நிறைவுரை**

அகில உலக பெண்கள் தினத்தை சிறப்பிக்கும்போது, பெண்களின் சாதனைகளை பெருமையோடு நினைத்துப் பார்க்கிறோம். அதே சமயத்தில் கிராமப்புறங்களில் யாருடைய கவனத்தையும் பெறாமல் தங்களது அன்றாட உணவுக்காக, பயணத்திற்காக, நீர் நிலைகளைக் காப்பாற்றும் பணிகளில் ஈடுபட்டிருக்கும் கணக்கற்ற பெண்களையும் நினைத்துப் பார்ப்போம். அவர்களுக்கு அரசு தரும் உரிமைகளை, சலுகைகளைப் பற்றிய விழிப்புணர்வைத் தருவோம். ஆண் பெண் சமத்துவதற்காக அனைவரும் நமது கரங்களை ஒன்றிணைப்போம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நமது அன்னை பாடிய புரட்சி கீதம் அனைவரின் விடுதலையையும் உள்ளடக்கியதாக இருந்தது. இறைமகன் இயேசுவின் பிறப்பு அரசியல், சமூக, பொருளாதார, சமயத்தளங்களில் ஒரு புதிய பார்வையைக் கொண்டு வரும் பழைய இரசம் பருகுவது மறைந்து போகும் அனைவரும் இயேசுவின் பார்வை, போதனை, அன்பு கட்டளை என்ற புதிய இரசத்தைப் பருகுவர் அதில் நீதியும் சுதந்திரமும் கொண்ட சமதர்ம சமுதாயம் உருவாகும் என்ற நம்பிக்கையில் அன்னை மரியா பாடிய பாடலை பெண்கள் அனைவரும் வாழ்வாக்க முயல்வோம். மரியா ஒரு பெண்ணாக இருந்தும் யூத சமுதாயத்தில் தன்னுடைய எழுச்சிநிறை சிந்தனைகளை ஊடுருவச் செய்தது ஒரு கலாச்சாரப் புரட்சி என்றே கூறலாம். பெண் அடிமையாக இருக்கும்வரை ஆண்களும் அடிமைகளே. எனெனில் பிறரை அடிமைப்படுத்துவோரும் அடிமைகளே. இயேசுவின் சமதர்ம சமுதாயத்தைப் படைக்க அன்னை மரியாவோடு சேர்ந்து முழு விடுதலைக்கான பூபாளத்தை இசைக்க நமது கரங்களை இணைப்போம்.





இல்லாமல் பிறக்க வைத்தார் என்று திருச்சபை நமக்குக் கற்றுக் கொடுக்கிறது. அன்னை மரியாள் இயேசுவை ஈன்றெடுத்தவர் மட்டும் நின்றுவிடாமல் அவருக்கு பாலூட்டி, சீராட்டி, அறிவு ஊட்டியும் வளர்த்து இயேசுவின் பொது வாழ்வில் துணை நின்று, சாவு வரை உடனிருந்து திருச்சபை பிறக்கும் போதும் துணை நின்று தூய ஆவியைப் பெற்று இயேசுவின் மீட்பு பணியிலே உடனிருந்து உழைத்தமையால்தான் அவளை உன்னதமான நிலையில் நாம் வைத்திருக்கின்றோம். “அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள்” என்ற வார்த்தைகள் எல்லா மக்களையும் இயேசுவின் பக்கம் இழுத்து வருவதாக இருக்கின்றது. என் மகன்தான் உங்களை எல்லாம் மீட்கப் போகிறார் என்று இதன் மூலம் ஆணித்தரமாக சுட்டிக் காட்டுகின்றார். “நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படி எனக்கு நிகழட்டும்” (லூக்கா 1:38) என்ற அன்னை மரியாவின் பணிவான வார்த்தை அவர் இறைவனின் மீட்பை திட்டத்தில் பணியாளராக இருந்து பணி செய்யத் துணிந்தார் என்ற வார்த்தைக்கு ஏற்றவாறு பணிந்து வாழ்ந்து இருந்தார் என்பதையும் நாம் அறிந்து கொள்கிறோம். மிகக் குறுகிய காலத்தில் இம்மண்ணில் வாழ்ந்த அன்னை மரியாள் ஆன்மீக வாழ்விலும், சமுதாய வாழ்விலும் நெறி தவறாமல் வாழ்ந்து, நமக்கெல்லாம் முன்மாதிரியாகத் திகழ்ந்து திருச்சபையின் வளர்ச்சிக்கு பங்களித்திருக்கின்றார். இயேசுவின் பணி வாழ்வில் வந்த அனைத்து இடர்களையும் பொறுமையோடு சகித்துக் கொண்டார். இயேசுவின் சிலுவைச் சாவையும் மிக மிக வேதனையோடு தாங்கிக் கொண்டார். இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக நம்பிக்கையோடு காத்திருந்து அவர் உயிர்த்தெழுந்த போது பெரிதும் மகிழ்ந்திருந்தார். திருச்சபையின் அனைத்து அங்கத்தினர்களுக்காக தன் மகனிடம் தொடர்ந்து பரிந்து பேசி இருக்கின்றார். ஆகவே திருச்சபைக்கு அன்னை மரியா ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்திருக்கின்றார்.

அன்னை மரியாள் ஆண்டவரிடத்தில் நமக்காகப் பரிந்து பேசும் தாயாக இருக்கின்றாள். இதை நம்மை விட நம் இந்து சகோதரர்கள் நன்றாக அறிந்து வைத்திருக்கின்றார்கள். சில சகோதரர்கள் தீவிர மாதா பக்தியாளர்களாகவும் இருக்கின்றார்கள். வேறு சிலர் ஆலயங்களுக்கு வராவிட்டாலும் நம்மிடம் அவர்களின் தேவைகளுக்காக மரியாவிடம் வேண்டிக் கொள்ளுங்கள் என்று பல நேரங்களில் நம்மிடம் கேட்டுக் கொண்டு வருகிறார்கள். இதை கண்ணுரும் போது அவர்கள் அன்னை மரியா மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. கிறிஸ்துவுக்குப் பிறகு அப்போஸ்தலர்களை ஒன்று கூட்டி, அவர்களை வழிநடத்தி தம்மைப் போன்று அவர்களை ஆவியின் அருள் பெற்று, அச்சமின்றி போதிக்கும் மன உறுதி பெற்று திருச்சபையைக் கட்டி எழுப்பி அவர்களோடு உடன் இருந்தார் நம் அன்னை மரியாள். பொதுவாக இந்திய மக்கள் பெண் தெய்வ வழிபாட்டினை பெரிதும் விரும்புகின்றார்கள். நம் இந்து மதத்தை கண்ணுரும் போது ஆண் தெய்வங்களை விட பெண் தெய்வங்களே மிக அதிக அளவில் காணப்படுகிறது. அந்த கோட்பாட்டில்தான் பெரும்பாலான மக்கள் கிறிஸ்தவத்திலும் சரி, இந்து மதத்திலும் சரி அன்னை மரியாவை தாய் என்ற முறையில் வணங்கி வழிபாடு செய்கின்றார்கள்.

“அந்த இளம் பெண் ஒரு ஆண்மகனைப் பெற்றெடுப்பார். குழந்தைக்கு இம்மானுவேல் என்று பெயர் இடுங்கள் (எசாயா 7:14) என்று தாவீதின் குடும்பத்தாருக்கு இறைவாக்கினர் வழியாக ஆண்டவர் தமது மீட்பின் வாக்குறுதியை உறுதிப்படுத்துகின்றார். ஆகவே இறைவனின் மீட்புத் திட்டத்தில் மரியாவும் பங்கு எடுத்துள்ளார் என்று ஆணித்தரமாக அறிய முடிகிறது. ஆகவே, பொதுநிலையினரின் பார்வையிலே அன்னை மரியாள் என்றென்றும் ஒரு நீங்காத இடத்தைப் பெற்று இருக்கின்றார். மரியே வாழ்க! மாதாவுக்கே புகழ்.



## பொதுநிலையினரின் பார்வையில் மரியா 01

திரு. பரிசுத்தமணி
சோழிங்கநல்லூர், சென்னை

அன்னை மரியாள். இந்த பெயரைக் கேட்டவுடன் நமக்குள் ஒரு புது ரத்தம் பாய்கிறது அல்லவா? ஆம், இவள் உலகத்து பெண்களுக்கெல்லாம் உத்தமமானவள். கபிரியேல் தேவ தூதர் இவரை அணுகி பெண்களில் பேறுபெற்றவர் நீரே! உமது திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் பேறுபெற்றவர் என உரைத்த நாள் முதல் தனது வாழ்க்கையைக் கடவுளுக்காக அர்ப்பணித்துக் கொண்டவர். இவர் மிகவும் சிறப்பானவர். ஏனென்றால், கடவுளையே தன் கருவில் தாங்கி பெற்று எடுத்தவள். இறை இயேசுவுக்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவள். இயேசுவின் ஒவ்வொரு செயலிலும், சொல்லிலும் இவரின் பங்கு அளப்பரியது. இவர் கடவுளாக இல்லாவிட்டாலும் இவர் செய்த அற்புதங்கள் ஏராளம், ஏராளம். கன்னித்தாயாக, அமல உற்பவியாக, விண்ணக அரசியாக நாம் காணும் மரியா பெண்களுக்கான எல்லா இலக்கணங்களையும் ஒருசேர பெற்றவராக திகழ்கின்றார். மதங்களைக் கடந்து ஏறக்குறைய எல்லா மதத்தினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சிறந்த பெண்மணியாக கன்னி மரியாள் விளங்குகின்றார். ஒரு பெண்ணுக்கு என்னவெல்லாம் சிறப்பு குணம் இருக்க வேண்டுமோ அத்தனை குணங்களும் அன்னை மரியாளுக்கு இருந்தது. அதனால்தான் மதங்களைக் கடந்து அவரிடத்தில் அனைவரும் அன்பு செய்கிறார்கள். தமிழகத்தில் இந்து சமயத்தைச் சார்ந்த பல சகோதர, சகோதரிகள் அன்னையின்மேல் பெரிதும் பக்தி கொண்டு அவருக்காக பல இடங்களில் நம் திருச்சபையைத் தாண்டி அன்னையின் திருவுருவசிலைகள் வைத்து வழிபாடு நடத்துகிறார்கள். அது மட்டும் அல்லாமல் வருடம் தோறும் அன்னையைத் தேடி, அன்னையின் அருள் வேண்டி வேளாங்கண்ணிக்கு நடை பயணமாக கூட்டம் கூட்டமாக செல்கிறார்கள், பல இடங்களிலே அப்படி நடைபயணம் செல்பவர்களுக்கு மற்ற மதத்தினர்கள் வழியெங்கும் உணவு கொடுத்து மகிழ்கிறார்கள். இதுவே மற்ற சமயத்தார்கள் நம் அன்னையின் மீது வைத்திருக்கும் அன்பை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது, அன்னை மரியாளை உலகெங்கும் அவரவர் வசதிக்கேற்ப பல உருவங்களிலும், பல பெயர்களிலும் அழைத்து வணங்கி வருகிறார்கள். இருந்தாலும், அன்னை மரியா கடவுளின் தாய் என்று மட்டுமே அனைவராலும் அறியப்படுகிறார்.

ஆரம்ப கால திருச்சபை வரலாற்றில் அன்னை மரியாளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. நாளடைவில் மரியாவின் அற்புதங்களையும், அதிசயங்களையும் கண்டபின் திருச்சபை மரியாவுக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தது. அவரை மகிமைப்படுத்தவும் அவருக்கு வணக்கம் செலுத்தவும் கோயில்களும், பேராலயங்களும், துறவு சபைகளும், பக்த சபைகளும் உருவாகின. அன்னை மரியாள் நிச்சயமாக கடவுள் அல்ல மாறாக இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர். இறைவனின் அருளால் நிரம்பப் பெற்றவர். அவர் நம்மைப் போலவே ஒரு மானிடப்பிறவி. ஆனால், இறைவன் அவரை முன் குறித்து வைத்திருந்தார். ஜென்மப் பாவம்





# அன்னையின் 51 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



### புனித பெரியநாயகி அன்னை ஆலயம் ஆவூர் - பகுதி 2

ஆவூர் பணித்தளம் பல்வேறு மறைப்பரப்பு குருக்களின் தியாகத்தால் உருவானது என்பதை நாம் கடந்த இதழில் கண்டோம். வெளிநாடுகளிலிருந்தும், கேரளாவிலிருந்தும் குருக்கள் இங்கு பணியாற்றி இருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். இக்குருக்களின் பட்டியலில் சிங்கள இனத்தைச் சார்ந்த ஒரு குருவும் இருக்கிறார் என்பது நமக்கு ஆச்சரியம் தரும் செய்தியாகும். அருட்பணி. நார்பர்ட் என்கிற சிங்கள சுதேச குரு, வைப்பாறு, சிப்பிகுளம், புன்னைக் காயல் முதலிய பங்குகளில் உழைத்தார். பிறகு மதுரை, மலையடிப்பட்டி, ஆவூர், வேங்கிடகுளம் ஆகிய பங்குகளில் தனது அயராத பணியால் பல மக்களை கிறிஸ்தவர்களாக மனமாற்றினார். அனைவருக்கும் ஆதரவாயிருந்த ஆவூர் பணித்தளம், பல்வேறு ஆண்டுகள் ஆண்டவருக்கு பணிபுரிந்து தளர்ந்த அருட்பணி. நார்பர்ட் அவர்களையும் அரவணைத்துக் கொண்டது. அன்னையின் அரவணைப்பில் தனது இறுதி நாட்களை கழித்த அருட்பணி. நார்பர்ட் அவர்கள் கி.பி. 1912ஆம் ஆண்டு மார்ச் 17ஆம் தேதி தனது 75வது வயதில் இறைப்பதம் சேர்ந்தார். இந்நாளில் திருச்சி மறைவட்ட அதிபராக இருந்த அருட்பணி. மெஸ்குயித்தா திருப்பலி நிறைவேற்றி அருட்பணியாளரின் உடலை ஆவூர் நந்தவனத்தில் அடக்கம் செய்தார். இங்ஙனம், ஆவூர் ஐந்து குருமார்கள் கல்லறை மற்றும் நந்தவனத்தில் மொத்தம் 15 குருக்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர். கிறிஸ்தவத்தைப் போதித்து, ஆண்டவரின் உயிர்ப்பில் தாங்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையின் எடுத்துக் காட்டுகளாக இவர்கள் திகழ்கிறார்கள்.

திருஅவையில் நிலவிய இரட்டை ஆட்சிமுறை, பல நேரங்களில் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு எதிர்சாட்சியாகவே அமைந்தது. இதை நன்கு உணர்ந்து கொண்ட திருத்தந்தை, இந்த எதிர்மறையான அனுவத்திலிருந்து திருஅவையை விடுவிக்கவும், ஆண்டவர் இயேசு விரும்பிய ஒரே திருஅவையை உருவாக்குவதிலும் முனைப்புக் கொண்டார். எனவே, போர்த்துக்கீசிய மன்னருடன் ஒரு உடன்படிக்கையை



செய்துகொண்டார். அதன் பலனாக, கி.பி. 1930 ஆம் ஆண்டு முதல் இந்தியாவின் சென்னை, டாக்கா, கல்கத்தா, திருச்சிராப்பள்ளி மற்றும் தூத்துக்குடியில் நிலவிய இரட்டை ஆட்சிமுறை முடிவுக்கு வந்தது. இரு பிரிவினரும் ஒற்றை பங்குத் தந்தையின் கீழ் தங்கள் ஆன்மீகத் தேவைகளை பூர்த்தி செய்துகொண்டனர். இந்நிலை, ஆவூரிலும் புது வேகத்தைத் தந்தது. மக்கள் ஒற்றுமையாய் வாழ ஆரம்பித்தனர்.

திருச்சி மறைமாவட்ட ஆயராய் இருந்த மேதகு. அகுஸ்தீன் பெஸாந்தியர், மேதகு. பீட்டர் லெயனார்டு ஆகியோர் ஒன்றுபட்ட மந்தையை செவ்வனே வழிநடத்தினர். இவர்களுக்குப்பின், முதல் சுதேச ஆயராக பொறுப்பேற்ற மேதகு ஜேம்ஸ் மென்டாசோ ஆயர் அவர்களுக்கு இவர்களின் வழிநடத்துதல் ஒரு சிறந்த அடித்தளமாக அமைந்தது. திருச்சி மறைமாவட்டத்தின் தொடக்க கால வரலாற்றில் அசைக்கமுடியாத இடம் பெற்றுள்ள ஆவூர் பெரியநாயகி அன்னையின் ஆலயமானது தொடர்ந்து பல்வேறு தியாகம் மிக்க குருக்களால் பராமரிக்கப்பட்டு வந்தது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஆலயத்தை சிதிலமடையாமல் தேவைப்பட்ட நேரங்களில் மராமத்து வேலைகளைச் செய்து, புதுப்பித்து இதன் பழமை மாறாமல் பாதுகாத்து வந்துள்ளனர். இத்தகைய பணிகளை செய்யாத காரணங்களினால் நாம் பல அற்புதமான ஆலயங்களை இழந்துள்ளோம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். குறிப்பாக இலுப்பூர் சத்தியநாதபுரத்தில் உள்ள கலைநுணுக்கங்களுடன் கட்டப்பட்ட புனித அந்தோணியார் ஆலயம் ஒரு எடுத்துக்காட்டாகும். இத்தகைய நிலை ஆவூர் ஆலயத்திற்கு ஏற்படாமல் பாதுகாத்த அத்துணை குருக்களுக்கும், நல் உள்ளங்களுக்கும் நாம் நன்றிக்கடன்பட்டிருக்கிறோம்.

அத்தகையவருள் ஒருவர் அருட்பணி. குழந்தைசாமி அடிகளார் ஆவார். கி.பி. 2003ல் பங்குப் பணியாளராக பொறுப்பேற்ற இவர், உடனடியாக ஆலய பராமரிப்பில் அக்கறை கொண்டு ஆலயத்தை முழுமையாக புதுப்பித்து கி.பி. 2005ஆம் ஆண்டு அர்ச்சித்து புனிதப்படுத்த காரணமாயிருந்தார்.

இப்பணித்தளத்தின் புழ்பெற்ற பணியாளரான வீரமாமுனிவர் திருஉருவமானது கி.பி. 2007 ஆம் ஆண்டு சனவரி 2ஆம் நாள் நிறுவப்பட்டது.





உண்மை ஒன்றை கண்டுபிடித்தல், புதியதொரு இலட்சியத்தை செயல்படுத்துதல் என்பவை எல்லாம் தாய்மையின் வெவ்வேறு தளிர்ப்புக்களே. ஏதாவது ஒரு வகையில் புதிய மானிடத்திற்கு நாம் பிறப்புக் கொடுக்கும்போதுதான் நமது மனிதமும் உண்மையில் மலருகின்றது.

மரியாவின் தாய்மையைக் கொண்டாடுவது மனிதத் தாய்மையை வாழ்த்தவும், வளர்க்கவும், பேணிக்காக்கவும், பெருமைப்படுத்தவும நமக்கு அழைப்பும், அறைகூவலுமாக விளங்குகிறது. நமது சமூகமும், பண்பாடும் தாய்மையைத் தெய்வமாகச் சொல்லளவில் போற்றத் தவறுவதில்லை. தாய்த் தெய்வ வழிபாடுகளுக்கும் திருநாள் கொண்டாட்டங்களுக்கும் இங்கு குறைவில்லை. ஆனால் நடைமுறையில் தாய்மை நமது சமூகத்தில் எத்தனையோ வகைகளில தாழ்வுக்கு உள்ளாக்கப்படுகிறது. காதலனால் கைவிடப்பட்ட நிலையில் கருச்சிதைவுக்கு நிர்ப்பந்தம் ஆகும் இளம் தாய்மார்கள் இங்கு இல்லையா? கருவுற்றிருக்கும் அல்லது குழந்தைக்கு பாலூட்டும் காலத்தில்கூட உரிய ஊட்டச் சத்து உணவின்றி பசியால் வாடும் தாய்மார் இங்கு இல்லையா? கணவனின் அடக்குமுறைகளுக்கும் அடி உதைகளுக்கும் ஆளாகி அல்லது அவனது குடிப் பழக்கத்தால் குடும்பமே குலைவதைக் கண்டு வாழ்வே கண்ணீர் கதையாகிவிட்ட தாய்மார் இங்கு எத்தனை எத்தனை. தள்ளாத வயதில் தங்கள் மக்களாலேயே கைவிடப்பட்டு அனாதைகள் ஆகிவிட்ட அன்னையர்களுக்கு இங்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது. இவ்வாறு தாய்மையைக் காக்கத் தவறும் அல்லது கலங்கவிடும் சமூகங்கள் தங்கள் ஆணிவேர் களையோடு அறுத்துக் கொண்டிருக்கின்றன.

தாயின் நலம் பேணப்பட வேண்டும். தாழ்நிலைகள் அகற்றப்பட வேண்டும். தாய்மை நம் ஒவ்வொருவரிடத்திலும் தழைத்தோங்க வேண்டும். அன்பு, கனிவு, இரக்கம், ஈகை, விருந்தோம்பல், பகிர்தல், எல்லோரையும் உறவாகக் கருதுதல், ஏழை எளியோர்க்கு உதவுதல் என்பன போன்ற தாய்மைப் பண்புகள் ஆயிரம் ஆயிரமாக நம்மில் தளிர்விட்டு வளர வேண்டும். இவற்றை அடிப்படையாகக் கொண்ட சகோதர சமூகம் ஒன்று நாம் படைக்க வேண்டும். இவ்வாறு விண்ணே இந்த மண்ணில் விடியும் அத்தகைய புதிய சமூகத்தின் பிறப்பிற்குத் தாயாக விளங்கிட நம்மை எல்லாம் அழைப்பதுதான் மரியாவின் தாய்மை.



பண்பாட்டின் மூல முதல் பார்வைகளையும்முக்கிய பழக்கவழக்கங்களையும் ஒருவனது உள்ளத்தின் ஆழத்தில் பதிய வைப்பது அவன் தாய்தான். ஒரு சமூகத்தின் மைய மதிப்பீடுகள், அடிப்படை வாழ்க்கையைப் பற்றிய ஆரம்ப பாடல்கள் அவனது ஆளுமையில் எழுதப்படுவது அவன் தன் தாயின் மடியில் தவழும்போதுதான். மேலும் ஒருவனுக்கு சமயத்தின் துவக்கமாகவும் அமைவது அவனது தாயுறவே. தாயன்புதான் அவனுக்கு இறையன்பின் முதல் அனுபவம் ஆகிறது. தாயின் கொஞ்சும் மொழிகளில்தான் இறைவார்த்தை முதன் முதலில் அவரை வந்தடைந்தது. இவ்வாறு பண்பாடும், சமயமும் தலைமுறை தலைமுறையாகத் தொடருவதில் தாய்மையின் பங்கும் பணியும் இன்றியமையாதவை.

பண்பாட்டின் தொடர்ச்சியில் மட்டுமன்று, அதன் வளர்ச்சியிலும், மாற்றத்திலும் தாயின் பணி மிகப் பெரிது. ஏனெனில், சமூக மாற்றங்களின் வித்துக்கள் தூவப் பெறுவது தாயின் மடியில்தான். புதிய எண்ணங்களையும் நோக்கங்களையும் குழந்தைகளிடம் அவற்றின் பெற்றோர், குறிப்பாக தாய், தூண்டிவிடுவது புதிய சமூகம் மலர முக்கிய காரணம்.

தாய்மையின் இன்னொரு முக்கிய பரிமாணத்தையும் மரியாவின் தாய்மை நமக்கு வெளிப்படுத்துகிறது. அதாவது, தாய்மை எல்லா மனிதருக்கும் உரியது. தாயாக வேண்டியது பெண்கள் மட்டுமன்று, ஆண்களும் கூடத்தான். இல்லறத்தார் மட்டுமன்று, துறவறத்தார் கூடத்தான். ஏனெனில் அன்பின் முதிர்ச்சியே தாய்மை. அது பிள்ளைகளைப் பெற்றெடுப்பது மட்டும் அன்று, அவர்களை வளர்க்கவும், அல்லது புதியதொரு சமூகப் பிறப்பிற்கு உதவும் ஒவ்வொரு செயலும் தாய்மையின் தன்மை உடையது. புதியதொரு கலை வடிவம் தருதல், புதியதொரு அர்த்தத்திற்கு எழுத்துரு கொடுத்தல், புதிய அறிவியல்





கி.பி. 2016ஆம் ஆண்டு பங்குப்பணியாளராகப் பொறுப்பேற்ற அருட்பணி. டேவிட்ராஜ் இத்திருத்தலத்தைப் புதுப்பொலிவுடன் விளங்கவைக்க வேண்டும் என்று உறுதிகொண்டார். திறந்த வெளி மைதானத்தில் இருந்த திருத்தலத்தை, தற்போதைய காலச்சூழல்களுக்கு உட்பட்டு பாதுகாக்க வேண்டியது இன்றியமையாதது என்பதை உணர்ந்து ஆலயத்திற்கான சுற்றுச்சுவரைக் கட்டினார்.

ஆவூர் அன்னையின் கொடியின் மகிமை அனைவரும் அறிந்ததே. அக்கொடி விண்ணில் பட்டொளிவிட்டு பறக்க ஒரு புதிய கொடிமரம் ஒன்றை நிறுவி, அக்கொடி மரமானது கி.பி. 2018ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளன்று அருட்பணி. இஞ்ஞாசிமுத்து அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது.

ஆலயத்தின் இருமருங்கும் ஆண்டவரின் பாடுகளைத் தியானிக்க சிலுவைப் பாதை நிலைகளை புதிதாக கட்டுவித்து அதனை கி.பி. 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் நாளன்று அருட்பணியாளர் டென்னிஸ் கில்பர்ட் அவர்கள் புனிதப்படுத்தினார்.


ஆலயம் முழுவதையும் மராமத்துப் பணிகள் பார்த்து, புதிய வர்ணம் தீட்டி புதுப்பிக்கப்பட்ட ஆலயம் மற்றும் சுற்றுப்புறம் அனைத்தும் கி.பி. 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் நாள் திருச்சி மறைமாவட்ட ஆயர் மேதகு ஆரோக்கியராஜ் அவர்களால் அர்ச்சித்து புனிதப்படுத்தப்பட்டது.

பதுர்வாதோ குருக்களால் ஏற்படுத்தப்பட்ட ஆலயம், ஒரே பங்கான பிறகு பல பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு பின் கவனிப்பற்று இருந்தது. சிதலமடைந்த இந்த புனித சூசையப்பர் ஆலயமும் புதுப்பிக்கப்பட்டு கி.பி. 2022ஆம் ஆண்டு ஏப்ரல் 7ம் நாள் ஆயர் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது.



புனித அருளானந்தர், வீரமாமுனிவர் ஆகியோரால் திருப்பலி கொண்டாடப்பட்ட பழைய ஆலய பீடமானது யாரும் கவனிப்பாரற்று கிடந்தது. ஆலய முகப்பின்இடது புறத்தில் ஒரு பாடுபட்ட சிலுவை வைக்கப்பட்டு அதன்முன் இப்பீடத்தை அர்ச்சித்து, அப்பீடத்தில் தற்போது திருப்பலி கொண்டாடப்படுகிறது. புனிதர்களின் பிரசன்னத்தால் அவ்வளாகம் அருள்நிறைந்ததாக உள்ளது.

கி.பி. 1800 களில் பெரிய யாகப்பரால் தொடங்கப்பட்டு, கி.பி. 1820ஆம் ஆண்டு அருட்பணி. பவுல் என்பவரால் நிறைவுசெய்யப்பட்ட தேரின் அடிப்பாகம் பழுதடைந்ததால்,



அடிப்பாகத்தைமாற்றி இரும்பினாலான அடிப்பகுதியும், சக்கரங்களும் அருட்பணி. டேவிட் அவர்களின் காலத்தில் செய்யப்பட்டது.

ஆலய வளாகம் முழுவதிலும் மின் விளக்குகள் எப்பொழுதும் பட்டொளி வீச ஏதுவாக, ஒரு புதியமின் சார ஜெனரேட்டரும் பொருத்தப்பட்டது. இங்ஙனம். பல நூற்றாண்டுகள் கடந்து இன்றுநிற்கும் இந்தமிகப் பெரிய ஆலயத்தின் நடுசாலை 216 அடி நீளமும், 40 அடி அகலமும் கொண்டதாக அமைந்துள்ளது. எளிய பரோக் பாணியில் கட்டப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தின் முகப்பில் புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன. உச்சியில் சிலுவை, அதை ஏந்தியவாறு இரு சம்மனசுக்கள், அதன் கீழ் புறாவடிவில் தூயஆவியானவரை குறிக்கும் சிற்பம், இவற்றின் கீழ் அன்னையின் திருஉருவமானது வைக்கப்பட்டுள்ளது. அன்னையின் பாதஅடிகளில் இரு சம்மனசுக்களின் சுரூபங்கள் உள்ளன. மாடத்தின் மேல் எக்காளம் ஊதும் இரு சம்மனசுக்கள் உள்ளன. மாதாவுக்கு இருபுறமும் சாவியை கையிலேந்திய பேதுருவும், வாளேந்திய பவுலின் திருஉருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. மாதா சுரூபத்தின் காலடியில் சாத்தானை சங்கிலியால் கட்டி அதன் மேல் ஈட்டியை கையில் வைத்திருக்கும் மைக்கேல் சம்மனசின் திருஉருவம் உள்ளது.

சிலுவை வடிவில் கட்டப்பட்ட இக்கோவிலின் பீடப்பகுதி கட்டி முடிக்கப்பட்டபின், ஐம்பது அடி கொண்ட எட்டு பிரமாண்டமான தூண்கள் மேல் ஒரு குவிமாடம் அமைக்கப்பட்டுள்ளது. தங்க மற்றும் நீல வண்ணங்களால் அழகு செய்யப்பட்டு ஐரோப்பிய மற்றும் இந்திய கட்டிட கலையின் கலவையாக உள்ளதாக கி.பி. 1927ஆம் ஆண்டு வெளியான “தி எக்சாமினர்” இதழில் வெளிவந்த கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.





# மரியா - கடவுளின் கடிதம்

20

அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.



## மானிட தாய்மைக்கு மகிமை

மானிடத் தாய்மைக்கு மங்காத இலக்கணமாக, மாபெரும் மாதிரியாக, மரியா துலங்குகின்றாள். மனிதத் தாய்மையின் உயர் பண்புகளையும், பணிகளையும் அழகுகளையும், அர்த்தங்களையும் மரியாவின் தாய்மை விளக்கிட்டுக் காட்டுகிறது. ஏனெனில் அவர் இயேசுவை பெற்றெடுத்துப் பேணி வளர்த்தவர் மட்டுமன்று, உயர்ந்த பண்புகளையெல்லாம் அவரிடம் ஊன்றிவிட்டு, அவரை மாமனிதராக மலரவைத்தவர். தெய்வத் திருமகனாகவே வளர்த்துவிட்டவர். ஆம், மரியா நீதியும் அன்பும் உண்மையும் நிலவும் நிறைவாழ்வுச் சமூகம் செய்ய தம் மகனை அனுப்பி வைத்தவர். தியாக தீபமாக அவர் சிலுவை ஏறியபோது ஈன்ற பொழுதிலும் பெரிது உவந்தவள். இவ்வாறு உலகெல்லாம் உய்ய தன் ஒரே மகனையே தந்து உலகத் தாயாகவே உயர்ந்து விட்டவர்.

தாய்மை என்பது அன்பின் உயர் வடிவம் , தியாகத்தின் திரு உருவம். மனிதத்தின் உன்னத வளர்ச்சி பெண்மையின் எழில் மலர்ச்சி. தாய்மையின் உயர்வில்தான் இந்த தரணியே உயர்கின்றது. ஏனெனில் தாயின் மடியில்தான் மானுடமே அரும்பி வளர்கிறது.

ஒவ்வொரு மனிதனும் கருவாவது தாயின் உதிரத்தில்தான். மழலை அவன் மனித ஆளாக உருவாகி வளருவது தன் தாயின் அன்பிலும் அரவணைப்பிலும்தான் எந்த ஒரு குழந்தைக்கும் அதன் ஆளுமையின் அடித்தளங்கள் இடம்பெறுவது அந்த தாயின் உறவில்தான. தாயின் மடிதான் முதல் பள்ளிக்கூடம். அவர் தாலாட்டுதான் வாழ்வின் முதல் பாடம். இதனால்தான், “தாயில்லாமல் நானில்லை” என்கிறது தமிழ்ப்பாடல்.

சமூகங்களின் வளர்ச்சிகளிலும், பண்பாடுகளின் வருங்காலங்களும், சமயங்களின் தொடர்ச்சியும் கூட, அடிப்படையான ஒரு வகையில் நிர்ணயிக்கப்படுவது தாயின் மடியில்தான். ஏனெனில், ஒரு



# இறை ஊழியர் பெர்னார்தினோ பிச்சிநெல்லி OSM



**அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச**

ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள். மீண்டும் கூறுகிறேன், மகிழுங்கள். கனிந்த உங்கள் உள்ளம் எல்லா மனிதருக்கும் தெரிந்திருக்கட்டும்....அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள உங்கள் உள்ளத்தையும் மனத்தையும் பாதுகாக்கும் (பிலிப்பியர் 4 4,5,7). இந்த இறைவாக்கோடுதான் நமது மரியின் ஊழியர் சார்ந்த ஆயர் பெர்னார்தினோக்கு இறை ஊழியர் பட்டம் 20 டிசம்பர் 2020 ல் நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் கொடுக்கப்பட்டது. இந்த இறைவார்த்தையிலே அவருடைய வாழ்வையும் பணியையும் அடக்கிவிடலாம். நமது இறைஊழியர் இத்தாலியின் மையப்பகுதியில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் 24 ஜனவரி 1905 ஆம் ஆண்டு பிறந்தார். சிறுவயதிலிருந்தே பீட சிறுவனாக இறைபணி செய்துவந்த பெர்னார்தினோ தன்னுடைய 12 ஆம் வயதில் மரியின் ஊழியர் சபையில் சேர்ந்து, தன்னுடைய 23 ஆம வயதிலேயே குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். தனது குருத்துவ பணியின் தொடக்க காலத்தில் ஆசிரியராகவும் உதவி பங்குப்பணியாளராகவும் இறைத்தொண்டு ஆற்றினார். பின்னர் 1937 ல் அன்கோனா என்கிற நகரில் உள்ள நமது மரியின் ஊழியர் பங்கிற்கு பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டார். அந்த நாளிலிருந்து அவருடைய இறப்பு வரை அங்கேயே இருந்து அந்த நகரின் மக்களின் வளர்ச்சிக்காக உழைத்தார். அவர் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்ட பின்பும் நமது பங்கிலேயே இருந்துகொண்டு மக்களுக்காக பணிசெய்தார். இவர் பணி செய்த காலத்தில் முக்கியான இரண்டு பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. முதலாவது, இரண்டாம் உலகப்போர், இரண்டாவது இவர் வாழ்ந்துவந்த பகுதியில் நடந்த நிலநடுக்கம். இந்த இரண்டையும் இறைஞானத்தோடு அவர் எதிர்கொண்டார். இந்த இரண்டு இக்கட்டான காலகட்டத்திலும், ஏழைகளுக்கு வீடுதேடி சென்று உதவி செய்தார். இளைஞர்களுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுப்பதிலும், இறை நம்பிக்கையை அவர்களில் வளர்ப்பதிலும் மிகவும் கவனமாக இருந்தார். எனவேதான், இவருடைய மறைமாவட்ட இறைமக்கள், இவருடைய மறையுரையை கேட்பதற்கும், இவரிடம் ஒப்புரவு அருட்சாதனம் பெறுவதற்கும் இவரைத் தேடி வந்தனர். மக்களின் எளிய மொழியில் அவர்களுக்கு ஆலோசனை வழங்கவும் ஆறுதல் அளிக்கவும் நன்கு அறிந்திருந்தார். மேலும், தனக்கு மற்றவர்கள் கொடுக்கும் அனைத்தையும் மக்களின் நலனுக்காக பயன்படுத்தும் தாராள மனதையும் கொண்டிருந்தார். இவ்வாறு மக்கள் பணி செய்து, உயிரோடு இருந்த காலத்திலே ஒரு புனிதராக கருதப்பட்ட பெர்னார்தினோ 1 அக்டோபர் 1984 ஆம் ஆண்டு இறந்தார். 1996 ஆண்டிலிருந்து இவரை புனிதராக்கும் படி மக்களிடமிருந்தே வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதன்படி, அவருடைய வாழ்க்கையை நன்கு ஆராய்ந்து அறிந்த பின்பு திருத்தந்தை 2020 ல் அவரை இறை ஊழியர் என்று அறிவித்தார். அந்த அறிவிப்பு மடலில் திருத்தந்தை பிரான்சிஸ் நமது பெர்னார்தினோவை பற்றி இவ்வாறு கூறுகிறார்: "இறையியல் நற்பண்புகளான நம்பிக்கை (faith), விசுவாசம் (hope), மற்றும் அன்பு (love) கொண்டு இறை ஊழியர் பெர்னார்தினோ கடவுளுக்கும், மனிதர்களுக்கும் சிறந்த தொண்டு ஆற்றியுள்ளது அவருடைய வாழ்க்கையின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன. மேலும், அவருடைய நற்குணங்களான விவேகம், நீதி, வீரம் மற்றும் நிதானம் அவரை இறை ஊழியர் நிலைக்கு உயர்த்துவதற்கு காரணமாக அமைந்துள்ளன".








ஆலய பலிபீடத்தின் நடுவே மாதாவின் பெரிய சுரூபமும், அதன் இருபக்கமும் சம்மனசுக்கள்சுரூபமும் உள்ளன. பெரிய மாதாசுரூபத்தின் கீழ் கண்ணாடிப் பேழையில் சிறிய மரத்தாலான ஒரு மாதாவின் சுரூபம் உள்ளது. இச்சுரூபமானது ஐரோப்பாவிலிருந்து வந்ததாக கூறுகின்றனர்.பீடத்தின் வலதுபுறத்தில் குழந்தைஇயேசுவை கரங்களில் தாங்கியுள்ள அன்னையின் திருஉருவமும், இடதுபுறத்தில் சூசையப்பரின் திருஉருவமும் உள்ளன. சூசையப்பரின் திருஉருவத்தின் இடதுபுறம் உயிர்த்த ஆண்டவரின் திருஉருவமும், அதன்கீழ் மரித்த இயேசுவின் திருஉருவமும் வைக்கப்பட்டுள்ளன.

ஆவூரில் தற்போதுள்ள ஆலயமானது கட்டப்பட்டு 226 ஆண்டுகளாகிறது. ஆலயத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் பெரியநாயகி அன்னை எப்போதும் தன் மகனின் பெயர் சொல்லி அழைப்போரின் குரலுக்காகக் காத்திருக்கிறார். பரிந்துபேசுபவராக இருந்து தன் திருமகனிடமிருந்து அருள்வளங்களை எப்போதும் பெற்றுத்தருகிறார். அருள்வளத்தை நமக்கு ஈந்து எந்நாளும் திருமகனை நோக்கி நம்மை நடத்தும் அன்னையின் பரிந்துரையிலும், அரவணைப்பிலும் எந்நாளும் நாம் வாழ்வோம்.

இக்கட்டுரை எழுத பல்வேறு தகவல்களையும், புகைப்படங்களையும் தந்துதவிய அருட்பணி. டேவிட் அவர்களுக்கும், அறியப்படாத கிறிஸ்தவம் நூலின் ஆசிரியர் நிவேதிதா லூயிஸ் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

**திருப்பயணம் தொடரும்..................**

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## 1 கொரிந்தியர்



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | | | | | 3 |
| | 6 | | | | | | | 5 | |
| | | | 13 | | | | 9 | | |
| | | | | X | X | | | | |
| | | | | X | X | | | | |
| | | 12 | | | | | | | |
| | | | | | | 11 | | | |
| | 10 | | | | | | | | |
| | 8 | | | | | | | 7 | |
| 1 | | | | | | | | | 2 |

**வலமிருந்து இடம்**

2) சகோதர சகோதரிகளே ஆவிக்குரியவர்களிடம் பேசுவதுபோல நான் ............. பேசமுடியவில்லை. மாறாக நீங்கள் ஊனியல்பு கொண்டவர்கள் எனவும் கிறிஸ்துவோடுள்ள உறவில் குழந்தைகள் எனவும் எண்ணிப் பேசுகிறேன்.

3) ஆண்டவரோடு சேர்ந்திருப்பவர் ................ உள்ளத்தால் ஒன்றித்திருக்கிறார்.

5) நற்செய்தியால் வரும் ........... பங்கு பெறவேண்டி நற்செய்திக்காக எல்லாவற்றையும் செய்கிறேன்.

7) எனவே சகோதர சகோதரிகளே நான் உங்களிடம் வந்து திருவெளிப்பாடு மெய்யறிவு............ போதனை இவற்றில் எதைக் குறித்தும் பேசாமல் பரவசப் பேச்சை மட்டும் பேசினால் என்னால் நீங்கள் அடையும் பயனென்ன?

9) கடவுள் நம்பிக்கைக்குரியவர் தம் ........... நம் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் நட்புறவில் பங்குபெற உங்களை அவர் அழைத்துள்ளார்.

11) எனவே குறித்த காலம் வருமுன் அதாவது .......... வருகைக்குமுன் யாருக்கும் தீர்ப்பளிக்க வேண்டாம்.

**இடமிருந்து வலம்**

1) நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் அருளும் ............ உரித்தாகுக! இயேசு கிறிஸ்து நமக்குமட்டும் அல்ல அனைவருக்கும் ஆண்டவர்.

4) கணவன் மனைவி ஆகிய இருவருள் நம்பிக்கை கொள்ளாத ஒருவர் பிரிந்து வாழ விரும்பினால் பிரிந்து வாழட்டும். இத்தகைய சூழ்நிலையில் நம்பிக்கை கொண்ட கணவனுக்கோ மனைவிக்கோ எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை. ஆனால் கடவுள் உங்களை ............வாழவே அழைத்துள்ளார்.

6) தம் தலையை மூடிக்கொள்ளாத எந்தப் பெண்ணும் தம் கூந்தலை வெட்டிக் கொள்ளட்டும். கூந்தலை வெட்டிக்கொள்வதையும் தலையை மழித்து விடுவதையும் இகழ்ச்சியாகக்............ அவர் தம் தலையை மூடிக்கொள்ளட்டும்.





இகழப்பட்டபோதும் ஒரே மனநிலையுடன் இருந்தார். மக்கள் அவரைப் போற்றியபோது அவர் புகழில் மயங்கவில்லை தூற்றப்பட்டபோது அவர் மனமுடைந்து போகவில்லை. கிறிஸ்துவிடம் விளங்கின மனநிலையுடன் நாம் வாழ்ந்தால், நாமும் உண்மையில் விசுவாச வாழ்வில் முதிர்ச்சி பெற்ற மனிதர்களே. இப்புனித வாரம் முழுவதும் இயேசுவோடு இணைவோம். அவரது அன்பை உணர்வோம். மனம் நொந்து அழுத பேதுரு போல, இயேசுவின் முன், நமது குற்றங்களை ஏற்று அவரோடு இறந்து உயிர்ப்பதற்குத் தயாராவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகம் இறைவாக்கினர் எசாயா துன்புறும் ஊழியனைப் பற்றி எழுதியுள்ள நான்கு கதைகளில் ஒன்று. துன்புறும் ஊழியனாகிய கிறிஸ்து மனிதனின் மீட்புக்காக தமது பாடுகளை நெஞ்சுறுதியுடன் ஏற்கிறார். மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார் என்ற அவரது போதனை அவரது பாடுகளில் நிறைவு பெறுகின்றது. இயேசுவைப் போல பிறரது நலனுக்காக துன்புறும் ஊழியர்களாக வாழ்வோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**


இன்றைய 2- வது வாசகம் இயேசுவின் தாழ்ச்சியையும் அவரது மகிமையையும் எடுத்துக் கூறுகிறது. தாழ்வே உயர்வுக்கு வழி, தாழ்வின்றி உயர்வில்லை என்கின்றது கிறிஸ்துவின் பாடுகள் . கிறிஸ்து சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்குக் கடவுளுக்குக் கீழ்ப்படிந்தார். என்று கூறுகிறது இன்றைய 2- வது வாசகம். நாமும் இறைவனுக்குக் கீழ்படிந்து அவரது திருவுளத்ததை நிறைவேற்றி, அவரது மாட்சிமையில் பங்கு பெற அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் , இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்து இப்புனித வாரத்தில் தியானித்து, அப்பாடுகளில் எங்களையும் கிறிஸ்துவோடு இணைத்துக் கொண்டு , அவரது உயிர்ப்பில் நாங்களும் பங்கு பெற அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா எங்களது அனுதின வாழ்வில் வரும் உடல், உள்ள, ஆன்மீகத் துன்பங்களை மனத்திடத்தோடும் மனவலிமையோடும் வாழ்ந்து உமது மாட்சிமையில் பங்கு பெற அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, உடல் நோய்களாலும் குடும்பப் பிரச்சினைகளாலும் கடன் தொல்லைகளாலும் நம்பிக்கை இழந்து வாழ்கின்ற எம் மக்கள் அத்துன்பங்களைக் கண்டு துவண்டு விடாமல் அவற்றை தைரியத்தோடு சந்திக்கும் மனதைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



தீமையிலிருந்து விடுதலை பெற்று உயிர்ப்பின் மக்களாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, இத் தவக் காலத் தில் எங்களதுசிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும் இறைவனுக்கும் அயலார்க்கும் எதிராக செய்துள்ள பாவத்தின் நிமித்தமாக நாங்கள் கொண்டுள்ள உயிரற்ற ஆன்மீகத்திலிருந்து விடுதலை பெற்று,மகிழ்ச்சியின், மாட்சியின் மக்களாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, உம்மில் விசுவாசம் கொண்டு மரித்த ஆன்மாக்களும் விண்ணுலகில் நிலை வாழ்வு பெற அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பாடுகளின் குருத்து ஞாயிறு**

**எசா 50:4-7 பிலிப் 2:6-11 மத் 26:14-27;66**

**முன்னுரை**

குருத்து ஞாயிறு திருவழிபாடு மக்களின் நிலையற்றத் தன்மையைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. எந்த மக்கள் குருத்து ஞாயிறு அன்று ‘ஓசன்னா’ பாடிக் கிறிஸ்துவை எருசலேம் திருநகருக்கு அழைத்துச் சென்றார்களோ அதே மக்கள் கூட்டம் கிறிஸ்து கைது செய்யப்பட்ட போது ‘அவன் ஒழிக’ என்று கூச்சலிட்டது. கிறிஸ்துவின் பாடுகள் விதியின் விளையாட்டோ. தலைமைக் குருக்களின் சதியோ அல்ல; மாறாக அது கடவுளின் திட்டம். அத்திட்டத்தைக் கிறிஸ்து மக்கள் மீட்புக்காக மன உவப்புடன் ஏற்று நிறைவேற்றினார். கிறிஸ்துவின் பாடுகளில், அவர் உடல் வேதனையைவிட மன வேதனையே அதிகம். பாடுகளின் போது அவர் அனைவராலும் கைவிடப்பட்டார். யூதாசு அவரைக் காட்டிக் கொடுத்தான், பேதுரு அவரை மறுதலித்தார். சீடர்கள் அனைவரும் ஓட்டம் பிடித்தனர். தலைமைச் சங்கம் அவருக்கு மரண தண்டனை விதிக்க ஆளுநர் பிலாத்தை வற்புறுத்தியது மக்கள் கூட்டம் பரபாசை விடுவிக்கக் கோரி கிறிஸ்துவைச் சிலுவையில் அறைய வேண்டுமென்று கூச்சலிட்டது. கிறிஸ்துவின் பாடுகளின் போது அவரைவிட்டு நீங்காத ஒரே ஒருவர் அவரது வானகத் தந்தை மட்டுமே. அவர் புகழப்பட்ட போதும்,





8) அனைத்துமே மகனுக்கு அடிபணியும்போது ...........அனைத்தையும் அடிபணியச் செய்த கடவுளுக்கு மகனும் அடிபணிவார். அப்போது கடவுளே அனைத்திலும் அனைத்துமாயிருப்பார்.

10) நடுகிறவரானாலும் நீர் பாய்ச்சுகிறவரானாலும் ஒன்றுதான். தாம் செய்த வேலைக்கு ஏற்ப ............ தம் கூலியைப் பெறுவர்.

12) நீங்கள் திருமணம் செய்துகொண்டால் அது பாவமல்ல. இளம் பெண்கள் திருமணம் செய்து கொண்டால் .......... பாவமல்ல.

**கீழிருந்து மேல்**

1) “ஆண்டவருடைய மனத்தை ............ யார்? அவருக்கு அறிவுரை கூறுபவர் யார்?” நாமோ கிறிஸ்துவின் மனத்தைக் கொண்டுள்ளோம்.

2) கடவுளின் திருத்தூதராகிய எங்களை அவர் எல்லாருக்கும் கடையராக்கினார் நாங்கள் மரண தண்டனை பெற்றவர்கள்போல் ஆனோம். மனிதருக்கும் வானதூதருக்கும் ............ காட்சிப் பொருளானோம் எனக் கருதுகிறேன்.

7) இறைவாக்கு உரைக்கும் ஆற்றல் எனக்கு இருப்பினும் மறைபொருள்கள் அனைத்தையும் அறிந்தவனாய் இருப்பினும் அறிவெல்லாம் பெற்றிருப்பினும் மலைகளை இடம்பெயரச் செய்யும் அளவுக்கு நிறைந்த நம்பிக்கை கொண்டிருப்பினும் என்னிடம் அன்பு ........... நான் ன்றுமில்லை.

11) எனவே புளிப்புச் சத்துள்ள பழைய மாவைத் தூக்கி எறிந்து விடுங்கள். அப்போது நீங்கள் புதிதாய்ப் பிசைந்த மாவாயிருப்பீர்கள். உண்மையில் நீங்கள் புளிப்பற்ற மாவாய்த்தான் இருக்கிறீர்கள். ஏனெனில் நம் பாஸ்கா ............ கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறார்.

12) சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் மற்றவருக்கு எதிராக வழக்குத் தொடரலாமா? ............நம்பிக்கை கொள்ளாத மக்கள் முன்னிலையிலா?

**மேலிருந்து கீழ்**

3) இதை ........... நீங்கள் இறுமாப்புடன் இருப்பது எப்படி? துயரமடைந்திருக்க வேண்டாமா? இப்படிச் செய்தவனை உங்கள் நடுவிலிருந்து தள்ளி வைத்திருக்க வேண்டாமா?

4) ஆனால் நமக்குக் கடவுள் ஒருவரே அவரே நம் தந்தை. அவரிடமிருந்தே............. வருகின்றன் அவருக்காக நாம் இருக்கின்றோம்.

5) அப்பம் ஒன்றே. ............ நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில் தான் பங்கு கொள்கிறோம்.

6) .......... ஆவியால் ஆட்கொள்ளப்பட்டுப் பேசும் எவரும் “இயேசு சபிக்கப்பட்டவர்” எனச் சொல்ல மாட்டார். தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறு எவரும் “இயேசுவே ஆண்டவர்” எனச் சொல்ல முடியாது. இதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

9) உங்கள் நம்பிக்கைக்கு அடிப்படை ............... அல்ல கடவுளின் வல்லமையே.

13) இவ்வாறு இந்த ‘அறிவு’ வலுவற்றவரின் அழிவுக்குக் காரணமாகிறது. அவர் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் அல்லவா? அவருக்காகவும் ............இறந்தார் அல்லவா?

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-03-2023**

**சென்ற மாதத்தின் விடைகள் உரோமையர்**

**வ. இ.** **1.** 1:4;**4.**8:7**;** **7.**14:3**;** **8**:15:11; **10.** 3:13;**11**.5:12

**இ. வ.** **2.** 3:17; **3.** 7:13; **5.** 9:6; **6.** 12:3; **9.**1:7;

**மே. கீ.** **1.** 2:14; **3.**5:15; **6.** 11:15; **8.** 15:14;**9.** 2:2**;10.** 6:19; **13.** 8:6

**கீ. மே.** **2.** 4:6; **4.** 8:16; **5.**10:1; **7.**13:6; **11.**4:8; **12.**7:18; **14.** 9:10

# பார்புகழ் பாத்திமா அன்னை வரலாறு ⑩

கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி



தரிசனமான அன்னையவரின் அற்புதமான ரகசியம்
ஜெசிந்தா சிறுமியால் கசிந்த நொடிமுதல்
பசித்த வயிறு புசிக்க தேடுதல் போல் -ஊரில்
வசித்த யாவரும் ருசிக்க மொய்த்தனர்
　　சகிக்க முடியா மரிய ரோசாவோ – லூசியாவை
　　சபிக்க தொடங்கி அடிக்கவும் முற்பட்டாள்
　　பங்கு தந்தைக்கு செய்தி தெரிவதற்குள்
　　பக்கத்து ஊர்களுக்கும் தீயாய் பரவியது
அடுத்த திங்கள் நெருங்கி வந்தது- பங்கின்
அந்தோனியார் திருவிழாவும் இணைந்து கொண்டது
சிறுவர் சந்தித்த சங்கடங்கள் எல்லாம்
பெரிதாய் சகிக்க சம்மதம் கொண்டனர்
　　அன்னையின் வருகைக்கு ஆயத்தம் கண்டனர்
　　திருவிழா என்பதால் ஆலோசனை செய்தனர்
　　அதிகாலையே ஆடுகளை கூட்டிச் செல்ல வேண்டும்
　　நண்பகல் உணவைக்கூட விட்டுவிட வேண்டும்
கடுந்தவம் ஒறுத்தல்கள் மேற்கொள்ளும் யாவனுமே
கொழுந்தால் எரியும் இயேசுவின் திருத்தலத்துக்கு
கடுகளவு மருந்தாயினும் அமைந்திடல் வேண்டும்
கொடும்பாவ செயல்களுக்கு ஈடுசெய்தல் வேண்டும்
　　முன்பைவிட இன்னுமாக மனதிடனைப் பெற்றனர்
　　பன்மடங்கு பலவிதமாய் முனைந்துவிட எற்றனர்
　　அந்தநாளும் வந்தது அதிவிரைவாய் விடிந்தது
　　ஆலோசனை செய்தபடி செயல்பாட்டில் இறங்கினர்
அதிகாலை முதற்படியாய் ஆடுகளை ஓட்டிச் சென்று
கோவர்த்தன மலைப் பகுதிக்கு அருகிலேயே அமர்த்தினர்
அந்தோனியார் திருவிழாவின் திருப்பலியில் கலந்தனர்
அடுத்தநொடி மலைக்குகைக்கு அங்கிருந்து நகர்ந்தனர்
　　பங்குமக்கள் மட்டுமன்றி அக்கம் பக்க கிராமத்தாரும்
　　பரவிவந்த செய்தியினால் பரபரப்பில் இருந்தனர்
　　தாங்களும் அதைப் பார்த்துவிட விரும்பினதால்
　　திருப்பலியும் முடிந்தவுடன் அனைவருமே கிளம்பினர்
முன்னதாக சென்ற சிறுவர் மண்டியிட்டு செபித்தனர்
பின்னதாக வந்தோரையும் செபிக்கும்படி அழைத்தனர்
நண்பகல் நெருங்கியது வயிற்றுப் பசியும் கிள்ளியது- மக்கள்
நம்பிக்கையில் குறைந்தனர் வேடிக்கையில் கலந்தனர்.







இலாசர் கல்லறையிலிருந்து வெளியே வந்த போது அவரது கைகளையும், கால்களையும் கட்டியிருந்த கட்டுகளை அவிழ்த்துவிடச் சொல்லுகின்றார் கிறிஸ்து . எனவே நாம் எல்லாவிதக் கட்டுகளிலிருந்தும் விடுதலை பெற்று , இம்மையில் நாம் செம்மையாக வாழ்ந்து விண்ணக வாழ்வை இம்மண்ணகத்தில் முன்வைத்திட அருள் வேண்டுவோம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

எங்கே போவது என்று முகவரி தெரியாமல் நாட்டையும் வீட்டையும், உடைமைகளையும் இழந்து, அந்நிய நாட்டில் அடிமைகளாக வாழ்ந்த இஸ்ரயேல் மக்களுக்கு இறைவாக்கினர் எசேக்கியேல் மூலம் கடவுள் நம்பிக்கை ஊட்டுகின்றார். அவர்களைக் கல்லறையிலிருந்து வெளியேற்றி, அவர்கள் மீது தமது ஆவியைப் பொழிந்து மீண்டும் அவர்களை அவர்களது சொந்த நாட்டில் குடியமர்த்தப் போவதாக வாக்களிக்கின்றார். மறுமையில் அல்ல, இம்மையிலேயே அவர்களுக்கு கடவுள் புதிய வாழ்வை வாக்களிக்கின்றார். நாமும் இம்மையிலேயே உயிர்ப்பின் மக்களாக வாழ இறையருள் வேண்டுவோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

தூய ஆவிக்குரிய வாழ்வு , ஊனுக்குரிய வாழ்வு இரண்டையும் வேறுபடுத்திக் காட்டுகின்றார் புனித பவுல் அடியார். ஊனியல்பு வாழ்வு பாவத்திற்கும் சட்டத்திற்கும் அடிமைப்பட்ட வாழ்வு, இது சாத்தான் வாழ்வு. ஆனால் ஆவிக்குரிய வாழ்வு உயிர்த்த வாழ்வு. மேலுலக வாழ்வு, செயல் வாழ்வு. இவை எல்லாம் அன்பு என்னும் ஒரே சொல்லிலே அடங்கிவிடும். அத்தகைய அன்பு வாழ்வை வாழ இறையருள் வேண்டுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருதந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவின் அன்புப் பணியை இவ்வுலகில் செயல்படுத்தி ஆவிக்குரிய மக்களாக வாழ்ந்திட அருள் வேண்டி உம்மை மன்றாடுகின்றோம்.

2அன்பின் இறைவா, இத்தவக்காலத்தில் செபம், தவம், மற்றும் தர்மம் ஆகிய அறச் செயல்களில் எங்களை முழுமையாக ஈடுபடுத்தி கொண்டு

கடவுளையும், அயலாரையும் அன்பு செய்து ஒளியின் மக்களாக வாழ அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும், இத்தவக்காலத்தில் ஒப்புரவு அருட்சாதனத்தால் பாவங்கள் கழுவப்பட்டு, ஒளியின் மக்களாக வாழ்ந்திட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, இத்தவக்காலத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் தனித்தன்மையை உணர்ந்து அவரது போதனைகளை வாழ்வாக்கி அக்கிறிஸ்துவின் போதனைகளுக்கு சாட்சி பகர்ந்திட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா திருமுழுக்கு அருட்சாதனத்தின் வழியாக உமது பிள்ளைகளாக தேர்ந்து எடுக்கப்பட்டுள்ள நாங்கள் ஒவ்வொருவரும் உமது திருவுளத்தை இவ்வுலகில் நிறைவேற்றி உமது அரசு இம்மண்ணுலகில் பரவ நாங்கள் எங்களை முழுமையாக அர்ப்பணித்து வாழக்கூடிய மனவலிமையைத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் இத்தவக்காலத்தில் உமது பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பு ஆகியவற்றைக் குறித்து தியானித்து எங்களது அகக்கண்கள் திறக்கப்பட்டு உம்மை முழுமையாகக் கண்டு உணரவும், உமது அன்பை எங்களது வாழ்வாக்கிடவும் எங்களுக்கு அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**தவக்காலம் 5 –ஆம் ஞாயிறு**

**எசே 37 :12-14 உரோ 8:8-11 யோ 11:1-45**

**முன்னுரை**

இறப்பு என்பது தவிர்க்க முடியாத இயற்கையின் நியதி. கிறிஸ்து விசுவாசப் பார்வையில் இறப்பு என்பது ஒருவகையான தூக்கம். இறந்தவர்கள் தூங்குகின்றனர் என்று இன்றைய நற்செய்தியில் கிறிஸ்துவெளிப்படுத்துகின்றார். இலாசர் இறந்து விட்டார். ஆனால் இயேசு தம் சீடர்களிடம் கூறுகின்றார், தம் நண்பன் இலாசர் தூங்குகின்றான். நான் அவனை எழுப்புவதற்காகப் போகிறேன். சாவு என்பது உறக்கம். பிறப்பு என்பது உறக்கத்திலிருந்து விழிப்பது என்று திருவள்ளுவர் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

“உறங்குவது போலும் சாக்காடு; உறங்கு
விழிப்பது போலும் பிறப்பு

இயேசு, இறந்த லாசரை உயிர்த்தெழச் செய்ததன் மூலம் அவர் எல்லாக் காலத்து மக்களுக்கும் விடுக்கும் செய்தி, “உயிர்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்” (யோவான் 11:25) இறைவன் மறுமையில் மட்டுமல்ல, இம்மையிலும் நிறைவாழ்வின் ஊற்றாகத் திகழ்கின்றார். இம்மையிலேயே நாம் உயிர்ப்பின் மக்களாக வாழ வேண்டும் என்பதே கடவுளின் விருப்பம்.





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



**தவக்காலம் மூன்றாம் ஞாயிறு**

**விப 17:3-7 உரோ 5:1-2,5-8 யோவா 4:5-42**

**முன்னுரை**

தவக்காலம் இறைவனது அன்பையும் அவரது இரக்கத்தையும் பெற இறைவன் நமக்கு அளித்த அருளின் காலம். இத்தவக்காலத்தில் இயேசுவின் தனித்தன்மையைத் தியானித்து அவ்விறைவனின் அருளைப் பெற அழைக்கப்படுகின்றோம். இன்றைய இறைவார்த்தை, கிறிஸ்து நமக்கு வாழ்வு தரும் தண்ணீராக இருக்கிறார் என்கிற உண்மையை உணர்ந்து வாழ அழைக்கின்றது. பாலைநிலத்தில் தண்ணீர் கேட்டு முறையிட்ட இஸ்ரயேல் மக்களுக்குக் கடவுள் பாறையிலிருந்து தண்ணீர் கொடுக்கிறார். கிறிஸ்துவே அந்தப் பாறை என்கிறார் பவுல் அடிகளார். விவிலியம் முழுவதுமே கிறிஸ்துவையே மையமாகக் கொண்டுள்ளது. சமாரியப் பெண் கிறிஸ்து யார் என்கின்ற முழு உண்மையை படிப்படியாக அறிகிறார். சமாரியப் பெண்ணுடன் கிறிஸ்து நடத்திய உரையாடல் மறைக்கல்வி முறையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. கிறிஸ்து யார் என்பதைப் படிப்படியாக உணர்த்துவதே மறைக்கல்வியின் இலக்கு. கிறிஸ்துவை உலக மீட்பராக ஏற்றுக் கொள்வதற்கு மறைக்கல்வி உதவுகிறது. கிறிஸ்துவை அறிந்து கொண்ட சமாரியப் பெண் ஓர் ஊர் முழுவதையும் கிறிஸ்துவிடம் கொண்டுவந்த ஒரு நற்செய்திப் பணியாளராக உருவெடுக்கிறார். நாமும் இத்தவக்காலத்திலே இயேசுவே உலகின் மீட்பர் என்பதை அறிந்து கொண்டு அக்கிறிஸ்துவின் பாடுகள் இறப்பு மற்றும் உயிர்ப்புக்கு சாட்சிகளாக வாழ்ந்திட இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.


**முதல் வாசக முன்னுரை**

பாலைவனத்தில் இஸ்ரயேலரின் முறையீட்டுக்கு செவிமடுத்து இறைவன் அவர்களுக்குக் குடிக்க தண்ணீர் வழங்குகிறார். இந்த வரலாற்று நிகழ்வின் வழியாக, நமது அன்றாட துன்ப துயரங்களின் மத்தியில் இறைவன் நம்மோடு இருந்து நமது அனுதின தேவைகளை நிறைவேற்றுகின்றார். எனவே நாம் எதைக் குறித்தும் கலங்க வேண்டியதில்லையென்று இன்றைய முதல் வாசகம் நமக்கு அறிவுரை கூறுகின்றது. நம்பிக்கையோடு ஆண்டவரிடம் வேண்டுவோம்.

மலைபோல் வருவதையெல்லாம் பனியாக மாற்றும் இறைவன் நம் இயலாமையிலிருந்து நம்மை விடுவிப்பார்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

குற்றம் செய்த நம்மைத் தண்டியாது, மன்னித்து, இறைவன் மீண்டும் தன்னுடன் இணைத்துக் கொள்கிறார். விசுவாசத்தால் ஒருவன் இறைவனுக்கு ஏற்புடையவன் ஆகின்றான். இறைவனது அன்பிற்கு ஆளாகி அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆன்மா அனுபவிக்கும் கொடைகளை பவுலடியார் விளக்குகிறார். மனிதர் மீது வைக்கும் நம்பிக்கை நமக்கு ஏமாற்றத்தை அளிக்கலாம், இறைவன் மீது நாம் வைக்கும் நம்பிக்கை ஒரு நாளும் வீண் போகாது என்ற உண்மையை உணர்ந்தவர்களாக இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.



**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இத்தவக்காலத்தில் ஜெபம், தவம் மற்றும் தர்மம் இவற்றின் வழியாக உமது இரக்கத்தையும், மீட்பையும் பெற துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, இத்தவக்காலத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் அச்சமாரியப் பெண்ணைப் போல எங்களது அனுதின உரையாடலின் வழியாக உம்மை அறிந்து கொள்ளவும், உமது இறைத்தன்மையை பிறருக்கு அறிவித்து வாழவும் அருள்புரிய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, எமது பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகள் மறைக்கல்வியின் இலக்கு கிறிஸ்துவை உலக மீட்பராக ஏற்றுக் கொண்டு வாழ்வதே என்பதை உணர்ந்து பங்குகளில் நடைபெறும் மறைக்கல்வி வகுப்புகளில் முழு மனத்தோடு ஈடுபட துணை செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.





4. அன்பின் இறைவா, இத்தவக்காலத்தில் எங்களது பழைய பாவ வாழ்வை விட்டுவிட்டு மனமாற்றம் பெற்று உம்மோடும் எங்களது அயலாரோடும் ஒப்புரவாகி வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**தவக்காலம் 4-ம் ஞாயிறு**

**1சாமு16:1,6-7;10-13 எபே 5:8-14 யோ 9:1-41**

**முன்னுரை**

திருமுழுக்கு என்ற அருள் அடையாளத்தின் வழியாக கிறிஸ்தவ வாழ்வு வாழ அழைக்கப்பட்டுள்ளோம். கிறிஸ்துவே வாழ்வு என்பது ஒளி வாழ்வு. ஆண்டவருக்கு உகந்த வாழ்வு என்பதை இன்றைய இறைவார்த்தை வழிபாடு நமக்கு உணர்த்துகிறது. இயேசு மனிதனின் ஊனக் கண்களை மட்டும் திறந்து அவற்றிற்கு ஒளி அளிப்பவரன்று. அகக் கண்களையும் திறந்து , விசுவாசமாகிய ஒளியை, மக்களுக்கு அளிப்பவர் என்பதை இன்றைய நற்செய்தி நமக்கு அறிவுறுத்துகிறது. பார்வையற்றவரின் புறக்கண்கள் திறந்தன. அவருடைய அகக்கண்ணும் திறக்கிறது. எனவேதான் பார்வை பெற்ற பின், ஆண்டவரே விசுவாசிக்கிறேன் என்று சொல்லி தமது விசுவாசத்தை அறிக்கையிடுகின்றான். கிறிஸ்துவால் ஒளிபெற்று பார்வை அடைந்தவர் கிறிஸ்துவுக்குச் சாட்சியம் பகர்கின்றார். பாவத்திற்கு அடிமைகளாயிருந்தபோது நாம் இருளின் மக்களாக இருந்தோம். திருமுழுக்கினாலும் ஒப்புரவு அருட்சாதனத்தாலும் இறைவன் நம்மை ஒளியின் மக்களாக மாற்றி உள்ளார். ஒளியின் மக்களாக வாழ்ந்திட , ஒளிக்குரிய செயல்களை நன்மை , நீதி, உண்மை முதலியவை நமது வாழ்வாக வேண்டும். ஒளியின் கடவுளைப் போன்று ஒழுக வேண்டும். நாமும் இத்தவக்காலத்தில் ஒப்புரவு என்ற அருட்சாதனத்தில் கழுவப்பட்டு, புதிய பார்வை பெற்று, புதுப்படைப்பாக மாறி, கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவொம்.

**முதல் வாசக முன்னுரை**

சவுல் இறைவனுடைய வார்த்தையை மீறியதால் இறைவன் அவரைப் புறக்கணித்துவிட்டு, தாவீதைத் தம் மக்களுக்கு அரசராக அருள்பொழிவு செய்கின்றார். ஆண்டவரின் அளவு கடந்த அதிகாரமும் சுதந்திரமும் இவ்வாசகம் வழியாக வெளியாகின்றது. இறைவனுக்கு அஞ்சுவோரே, அவரது நன்மைத்தனத்தை நம்புவோரே அவருக்கு உகந்தவர்களாவர். நாமும் இறைவனுக்கு உகந்தவர்களாக, இறைவனது நண்பர்களாக வாழ நமது பாவத்தை விட்டுவிட்டு அவரது வார்த்தையை வாழ்வாக்குவோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள்ளே புதுவாழ்வு வாழ அழைக்கப்பட்டவர்கள் என்பதை இன்றைய இரண்டாவது வாசகம் சுட்டிக்காட்டுகிறது. கடவுளோ உங்கள் மேல் அன்பு கூர்ந்தார். நீங்களும் அன்பு கொண்டு ஒழுகுங்கள் என்கிறார் புனித பவுல் அடியார். எனவே ஒளியின் மக்களாக இருப்பதும் அன்பு வாழ்வு வாழ்வதும் ஒன்றே.